15th
OCTOBER
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 53 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## சைக்கிளில் வந்த மாணவி நதா!


பிரதமரிடம் மகஜரும் கையளிப்பு!



பிரதமருக்கு 14 வயது மாணவியால் மகஜர் ஒன்று 02ம் பக்கம்பார்க்க...

# குர்ஆன் பிரதிகள் அறபு கிதாபுகளுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தவும்

## வேட்பாளர்களான முனீர் முலப்பர், றமீஸ் முஹிதீன் அமைச்சர் விஜிதவிடம் வேண்டுகோள்





(அஷ்ரப் ஏ. சமட்)

அல்குர்ஆன் பிரதிகளையும் அறபு கிதாபுகளையும் இறக்குமதி செய்வதிலுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, சுமுகமான சூழ்நிலையை உருவாக்கித் தருமாறு, அக்கறைப்பற்று

றமீஸ் முஹிடீனும் அஷ்ஷெய்க் முனீர் முழஃப்பரும், கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்திடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அமைச்சரைச் சந்தித்து இது தொடர்பான முக்கிய 02ம் பக்கம்பார்க்க...

# பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் புத்திசாதுரியமாக தீர்மானம் எடுக்க வேண்டும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்



பெரும்பான்மை நம்பிக்கையுடன் கூடிய சஜித் பிரேமதாசவின் தலைமையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு இல்லையானால் நாடு பாரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ள வாய்ப்புள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளருமாற இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

02ம் பக்கம்பார்க்க...

# திலிதின் கட்சியில் இம்ரானின் சகோதரி இணைவு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

முன்னாள் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் சகோதரியும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் 07ம் பக்கம்பார்க்க...






# வெள்ளத்தைக் கட்டுப்படுத்த நிலையான சரியான தீர்வு தேவை

## அதிகாரிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி அனுர



இவ்வருடம் இரண்டு தடவைகள் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதாகவும், அதற்கமைவாக அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு சரியான மற்றும் நிலையான வேலைத்திட்டம் அவசியம் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இன்று (14) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குப் பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துக்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஏற்கனவே கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் மேலும் பணம் தேவைப்படுமாயின் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார்.

இவ்வருடத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேதமடைந்த சொத்துக்கள், மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்த, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி.தர்மதிலக, அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) டபிள்யூ.டபிள்யூ.எஸ். மங்கல, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிறி கருணாவர்தன, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. கருணாநாயக்க, தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நாமல் இந்திக லியனகே, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ, ஜி.ஏ.கே. திலகரத்ன ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

---

### சைக்கிளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*கையளிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கு சைக்கிளில் வந்த 14 வயது மாணவி பாத்திமா நடா நேற்று பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.*

*அதில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதித்துள்ள போதைப்பொருள் நெருக்கடிக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்குமாறும் கோரி இந்த மகஜரை அவர் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

---

### குர்ஆன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஆவணங்கள் சிலவற்றை தோழர் றமீஸ் முஹிடீன் கையளித்துள்ளார். சட்டத்தரணி றிஷாட் புஹாரியும் உடன் இருந்துள்ளார்.*

*எதிர்காலத்தில் இதிலுள்ள இடர்பாடுகள் நீக்கப்பட்டு, சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். குர்ஆன் பிரதிகளை, முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.*

*முன்னைய அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு இது என்பது தெரிந்ததே.*

---

### பொதுத் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்த நாடுகள் பயணித்த பாதையில் இலங்கையும் செல்வதற்குத் தேவையான வேலைத்திட்டம், தொலைநோக்கு மற்றும் சிறந்த அணி எது என்பதை மக்கள் கவனமாக சிந்திக்க வேண்டும். இந்த நாட்டில் அரசியல் புரிந்துணர்வுடன் செயற்படும் ஜனாதிபதியும் அரசாங்கமும் உருவாக்கப்பட வேண்டும். நாட்டு மக்கள் உணர்ச்சிகளால் அல்லாது, புத்திசாலித்தனத்தால் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.


ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடையில் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத் தேர்தலில் தகுந்த வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என்றும் அவர் அங்கு கூறியிருந்தார். தற்போது வலுவான ஆட்சி அமைக்க மக்களின் ஆதரவை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறான நிலையில் நாட்டு மக்கள் உணர்வுவயப்பட்டு செயற்படாமல் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.

நமது நாட்டு வரலாற்றில் கூடிய அதிகாரம் மேலாதிக்கப் போக்குகளை உருவாக்கியுள்ளது. கூடிய அதிகாரம் ஊழலுக்கு வழிவகுத்துள்ளது. உலகில், ஜனாதிபதி ஒரு கட்சியையும், பிரதிநிதிகள் சபை மற்றொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பிரான்சின் ஜனாதிபதி ஒரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியே பெரும்பான்மை பலத்தை கைப்பற்றியது. அமெரிக்காவில் ஜனாதிபதி ஒரு கட்சியையும், பிரதிநிதிகள் சபை மற்றொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அந்த நாடுகளின் ஆட்சியில் சமநிலையையும் சமநிலையையும் காண முடிகிறது. இந்நாடுகளில் காணப்படும் ஆட்சியில் அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகளை காண முடிகிறது.

இந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைக் கொண்ட அரசாங்கத்தை தெரிவு செய்வது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லது என நம்புகிறோம். இது நாட்டின் ஜனநாயகத்திற்கும் முக்கியமான விடயமாகும். இத்தகைய முடிவினால் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படாது. சட்டத்தின் ஆட்சி செயல்படுவதற்கும் இது ஒரு காரணமாக அமையும். ஐக்கிய மக்கள் சக்தி சமூக ஜனநாயக நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி முற்போக்கான கட்சியாகும்.

மேலும், இன்று உலகம் தீவிர சோசலிஸ போக்கை நிராகரித்துள்ளது. தீவிர வலதுசாரி போக்கையும் இன்று உலகம் நிராகரித்துள்ளது. தீவிர இடதுசாரி, தீவிர வலதுசாரி போக்குகளை நிராகரித்த நாடுகள்தான் இன்று பொருளாதார ரீதியாக வலுவான நாடுகளாக காணப்படுகின்றன. சீனா, வியட்நாம் உள்ளிட்ட இன்னும் பல நாடுகள் சாத்தியமான பாதையில் பயணிப்பதால் தான் அந்த நாடுகள் இன்று பொருளாதார ரீதியாக வலுப்பெற்றுள்ளன.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் வலையில் நான் சிக்கமாட்டேன் என ஜனாதிபதி அனுர திஸாநாயக்க ஜனாதிபதியாகும் முன்னர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் பொருளாதாரத்தை கையாளும் நாடுகள் பொருளாதார ரீதியாக பலம் அடையவில்லை என அப்போது அவர் கூறியிருந்தார். ஆனால் எந்தவொரு நிபந்தனையையும் முன்வைக்காமல் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை தொடர்வதற்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளார். அதிகாரம் கிடைத்த பிறகு, பொறுப்பை உணர்கிறார். ஆழத்தை உணர்கிறார். அதிகாரம் கிடைத்த பெற்ற பிறகு நடைமுறை ரீதியாக நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. சர்வதேச நிதி மாதிரி யதார்த்தத்திலிருந்து எம்மால் விலக முடியாது. கோஷங்கள் மூலம் மக்களைத் தூ ண்டிவிட்டு, பொய்யான விசித்திரக் கதைகளை உருவாக்கி மக்களை ஏமாற்றக் கூடாது. நாட்டு மக்கள் புத்திசாலித்தனமாக முடிவுகளை எடுக்க வேண்டும். கவர்ச்சிகரமான கருத்துக்களுக்கு மயங்காமல் இந்த நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகில் வெற்றி கண்ட நாடுகள் பயணித்த பாதைக்கு எமது நாட்டையும் இட்டுச் செல்ல வேண்டும்.




தேர்தல் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
070 239 7210

# சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பட்ட நீர்க்கசிவு தொடர்பான தெளிவூட்டல்...

காரைதீவு - அம்பாறை பிரதான வீதியின் சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியிலிருந்து அம்பாறை நகருக்கு செல்லும் பிரதான வீதியில் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அண்மையில் ஏற்பட்ட நீர்க்கசிவு தொடர்பாக சமூக ஊடகங்களில் உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளிவந்ததையடுத்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது இச்சம்பவம் தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து அப்பகுதி நீர்ப்பாவனையாளர்களுக்கு உரிய முறையில் தெளிவூட்டல் வழங்கப்படுகின்றது.

இப்பிரதான வீதியினூடாக நீரை கொண்டு செல்கின்ற பிரதான பாரிய நீர்க்குழாய்கள், நீரை விநியோகிக்கின்ற குழாய்கள் உட்பட மொத்தமாக ஆறு குழாய்கள் செல்கின்றது. அதில் கைவிடப்பட்ட 225 மில்லி மீற்றர் பி.வி.சி குழாய்கள் இப்பிரதான பாதையின் உட்பகுதியில் ஆழத்தில் சுமார் 1000 மீற்றர் நீளத்தில் காணப்படுகின்றது.

சுமார் இரண்டரை மாதங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட இடத்தின் மேற்தரையில் இருந்து சிறியளவு நீர்க்கசிவு காணப்பட்டது. இக்கசிவினை சபையின் உரிய பகுதிக்கான நீர் வழங்கல் சபை உத்தியோகத்தர்கள் அவதானித்து இக்கசிவினை அடையாளம் காண அப்பகுதியில் தோண்டப்பட்டு இரண்டு நாட்கள் இக்குழி மூடப்படாமல் அவதானித்த போதும் நீர்க்கசிவு நிலத்திற்கு கீழ்ப்பகுதியில் கண்டறியப்படவில்லை. ஆனாலும் நிலத்திற்கு மேற்பகுதியில் நீர்கசிந்த நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் கசிவடையும் நீரில் குளோரின் அளவினை கண்டறிய அதற்கான பரிசோதனைகளும் செய்யப்பட்டது. ஆனால் அதில் குளோரின் ஏதும் தென்படவில்லை.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை மூலம் நீர்க்கசிவானது கண்டுபிடிக்கப்படாமையினால் சபையின் உயரதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக உயர் தொழிநுட்ப கருவிகளின் மூலம் நீர்க்கசிவினை கண்டறிவதற்கான ஆய்வுகள் ஜ/ன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் அதிலும் நீர்க்கசிவிற்கான உரிய இடம் கண்டறியப்படவில்லை. இந்நிலையில் 2024 ஜ/லை மாத நடுப்பகுதியில் இந்நீர்க் கசிவானது இல்லாமல் இருந்தது. இருப்பினும் ஜூலை மாத இறுதியில் அதே இடத்தில் புதிய நீர்க்கசிவுகள் கண்டறியப்பட்டது. இக்கசிவின் மூலம் வீதி பாதிப்புக்குள்ளாகமல் இருக்க அதனை தவிர்க்கும் முகமாக இதன் மூலம் வெளிவரும் நீரை தற்காலிகமாக அருகிலுள்ள வடிகாலுக்குள் குழாய் ஒன்றின் மூலம் அனுப்புமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நீர் வழங்கல் சபையின் உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கினங் நடைமுறைப்படுத்தப்பட்டு இக்குறித்த இடமானது தொடர்ச்சியாக நீர் வழங்கல் சபையினால் கண்காணிப்பு செய்யப்பட்ட வந்த நிலையில், 2024 செப்டம்பர் 24 ஆம் திகதி நீர்க்கசிவில் அதிகரிப்பு ஏற்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது. அந்நீரானது சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீராக இருந்ததோடு, இக்கசிவானது ஏற்கனவே மேற்குறிப்பிட்ட கைவிடப்பட்ட குழாயிலிருந்து வெளிவந்த நீராகும் என்பது கண்டறியப்பட்டது.

ஏற்கனவே இவ்விடயத்தில் பெற்ற அனுபவத்தைக் கொண்டும், நீர்க்கசிவை இனம் காண்பதில் ஏற்பட்ட சிரமங்களையும் கருத்தில் கொண்டு கைவிடப்பட்ட 225 மில்லி மீட்டர் நீர்க்குழாயின் குறிப்பிட்ட பகுதியை நீர் வருவதை தடுப்பதற்காக செப்டம்பர் 25 ஆம் திகதி தோண்டப்பட்டு மூடியிடப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக நீர்க்கசிவு முற்றாக நிறுத்தப்படவில்லை.இப்பகுதி நீர்ப்பாவனையாளர்களுக்கு தடையின்றி இந்நீரை வழங்கும் நோக்கில் மறுநாள் (செப்டம்பர் 26) இதனை சீர் செய்வதற்காக திட்டமிட்ட போது அத்தினத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் குறித்த நீர் குழாய்களில் நீரற்ற நிலை காணப்பட்டதனால் நீர்க்கசிவின் உரிய இடத்தினை அடையாளம் காண்பதில் சிரமம் என்பதனால் திருத்த வேலை கைவிடப்பட்டது.

மேலும், பிரதான வீதிக்கு சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய நீர்க்கசிவு இடத்தினை கண்டறிய உயர் தொழிநுட்ப வசதிகளுடனான கருவிகளை கொண்டு 2024 செப்டம்பர் 26 ஆம் திகதி நள்ளிரவில் உரிய இடம் கண்டறியப்பட்டு அது முழுமையாக வெற்றிகரமாக சீர் செய்யப்பட்டு பொது மக்களுக்கு எந்தவித தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக நீர் வழங்கப்பட்டது என்பதை நீர்ப்பாவனையாளர்களுக்கு இவ்வறிக்கை மூலம் தெளிவுப்படுத்தப்படுகின்றது.






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 OCTOBER 15 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வெள்ளம் தொடர்ந்து ஏற்பட மழை மட்டும் காரணமா?

நாட்டில் தொடரும் பாதகமான காலநிலை காரணமாக அனேக பிரதேசங்களில் மக்களது இயல்பு வாழ்க்கையை பாதிப்படைந்துள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அதிக அனேகர் தனது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு கூட சிரமப்பட்டு கொண்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கி உள்ளதோடு நிவாரண நடவடிக்கைகளுக்காக 80 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதி அமைச்சுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். திடீர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணங்கள் கிடைப்பதனை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். நாட்டின் 11 மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அனர்த்த நிவாரண நிலையம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவிகளுக்கு மேலதிகமாக தொண்டரமைப்புகள், பாதிப்புக்கு உள்ளாகாத பகுதிகளில் வாழும் மக்கள், சமய ஸ்தாபனங்கள் தம்மால் இயன்ற உதவிகளை இனமத பேதம் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன் வர வேண்டும். அரசின் உத்தியோகபூர்வ தகவலின் படி சுமார் 80,000 பேர் தம் இல்லங்களில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மழை தொடர்வதனால் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மழையால் பாதிக்கப்படாத பிரதேசங்களில் வாழும் மக்கள் நிவாரண பொருட்களை திரட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன் வர வேண்டும். இதற்கு முன்பும் இவ்வாறான செயற்பாடுகளில் முன்மாதிரி காட்டிருப்பதை சுட்டிக் காட்டலாம். பல பிரதேசங்களில் மக்கள் பாதிக்கப்பட்டு மக்களுக்கு சகோதர வாண்மையுடன் உதவுவது இலங்கை மக்களுடைய ஒரு பழக்கமாகும். கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் களனி கங்கை பெருக்கெடுத்து வருவதால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று களுத்துறை மாவட்டத்திலும் பல பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

புலத் சிங்கள, பரகொட பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் இப் பிரதேசம் இம்முறை 17வது தடவையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து இவ்வாறு வெள்ளத்தில் மூழ்வதற்கு உக்குளேகங்க நீர்த்தேக்கத்திட்டம் தான் காரணம் என்றும் பொதுமக்கள் அங்கலாய்கின்றனர்.

உரிய முறையில் திட்டங்கள் வகுக்கப்படாது நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதே இவ்வாறான வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு இடமளிக்கிறது. எனவே இவ்வாறான திட்டங்களை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது. வெறுமனே வெள்ள நிவாரணங்களை வழங்குவதோடு நின்று விடாது இவ்வாறான பிரதேசங்களில் வெள்ளம் ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது குறித்து நீர்ப்பாசன அமைச்சின் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அரசாங்கம் வெள்ள நிவாரணத்துக்கு வழங்கும் நிதி போன்று எதிர்காலத்தில் இவ்வாறு பாதிக்கப்படும் பிரதேசங்கள் ஏன் பாதிக்கப்படுகின்றன என்பதை தேடி அவ்வாறான வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதில் கவனம் செலுத்த வேண்டும்.






# பிறீ பலஸ்தீன் அமைப்பினால் நடாத்தப்பட்ட கண்டண கூட்டம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இஸ்ரேலிய அராஜகப் படைகள் பலஸ்தீன், காஸா மற்றும் லெபனான் போன்ற முஸ்லிம் நாடுகள் மீதும், அங்குள்ள அப்பாவி மக்கள் மீதும் மேற்கொண்டு வரும் மிலேச்சத்தனமான படுகொலைகளை கண்டித்தும், தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் படுகாயமடைந்த மக்களின் புகைப்பட மற்றும் கானொலி காட்சிகள் காண்பித்தும் கமாஸ் இயக்கத்தினால் காஸா மக்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப் பட்ட விசேட தடுப்புத் தாக்குதலுக்கு ஒரு வருடமாவதையும் முன்னிட்டும் கண்டன கூட்டம் ஒன்றினை பிறீபலஸ்தீன் மூமண்ட் ஒப் சிறிலங்கா அமைப்பினால் கொழும்பு 9 தெமடகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியலயத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான ஈரான் தூதரகத்தின் தூதுவர் கலாநிதி அலீ ரிஸா தெல்குஸ் மற்றும் விசேட அதிதிகளாக சவுத் ஆபிரிக்காவின் இலங்கைக்கான தூதரகத்தின் உயர் ஸ்தானிகர் சன்டிலி சால்க், நாரேகன்பிட்டி தர்மதுத விஹாரையின் விஹாராதிபதி அலுத்கம இன்டரத்தன தேரர், ஈரான் தூதரகத்தின் கலாசார கவுன்சிலர் கலாநிதி பி.எம்.குதர்சி, மனித உரிமைகள் அமைப்பு லங்காவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசீம், அரசியல் ஆர்வலர் சிராஸ் யூனூஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நிகழ்வின் உறுதியுரையை சகோதரர் ஸாமில் வழங்கியதுடன் பலஸ்தீன் சிறுவர்களுக்கான அனுதாப மடலை சிறுமி அஸ்லிஹா சிஹான் வாசித்தார்.

இந்நிகழ்வில் பிறீபலஸ்தீன் மூமண்ட் ஒப் சிறிலங்கா அமைப்பின் ஏற்பாட்டாளர்கள், வை.எம்.எம். ஏயின் தலைவர் மற்றும் உயர்பீட உறுப்பினர்கள், இளம் முஸ்லிம் மாதர் அமைப்பின் அங்கத்தவர்கள், கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்டீன், ஈரான் தூதரக அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய நாட்டுப் பாடசாலை மாணவ மாணவிகள் இலங்கைக்கு விஜயம்




(இக்பால் அலி)

இந்தியா இலங்கை மாணவர்களுக் கிடையே நட்புறவை ஏற்படுத்தும் வகையில் இந்தியாவிலுள்ள 14 மாணவ மாணவிகளும் 2 ஆசிரியைகளும் கண்டி பதியுதீன் மகளிர் கல்லூரிக்கு வருகை தந்தனர்.

இம்மாணவர்களுக்கு விசேட வரவேற்பு அளிக்கப்பட்டு இரு மாணவர்களுக்கிடையிலான கலாசார நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் இடம்பெற்றது.

பிரதி அதிபர் இம்தியாஸா பாஷரூகின் நெறிப்படுத்தலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் செயலாளர் பி. சோமராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கண்டி கல்வி வலயத்தின் ஆங்கிலப் பிரிவுக்கான உதவிப் பணிப்பாளர் தீப்தி பிரியதர்சனி மற்றும் பாடசாலை மாணவிகள் ஆசிரியைகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அல் ஹிக்மா பாடசாலைக்கு விஜயம்




(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் விஜயம் மேற்கொண்டார். பாடசாலையின் நிறைவேற்று அபிவிருத்தி குழுவின் அழைப்பை ஏற்று வருகை தந்த அவர் பாடசாலையின் அத்தியவசிய தேவையாக இருக்கின்ற வகுப்பறை பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

அதிபர் எஸ்.ஏ.ஜஸாஹிர் தலைமையிலான இடம்பெற்ற இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் பொறியியலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டியிருந்தனர்.

# கண்டியில் 12 ஆசனங்களுக்கு 510 அபேட்சகர்கள் போட்டி

(ரஷீத் எம். றியாழ்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் 12 ஆசனங்களுக்கு 510 அமைச்சர்கள் போட்டியிடுகின்றனர் .

இம்முறை 22 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சை குழுக்களும் கண்டி மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

இம்முறை முன்வைக்கப்பட்ட வேட்பு மனுக்களுக்கு எதிராக 12 ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்தார்.

# தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம் வெளியீடு



(எம் எச் எம் சியாஜ், எம்.யூ.எம் சனூன்)

அடுத்த மாதம் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பாக புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி
01. சந்தன அபேவர்த்தன.
02. கயான் ஜனக.
03. எண்டன் ஜயகொடி.
04. தீப்தி அப்புஹாமி. 05. சாகர விஜேசேகர.
06. அஜித்கிஹான்.
07. லோ. ஹிறுனி.
08. அமில ரத்நாயக்க.
09. நிமால் புத்திரன்.
10. டொக்டர் சுனிமல்.
11. பைசல் மொஹமட்
ஆகியோர் போட்டியிட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



எதிர் வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிட சமூக சேவையாளரான அன்ஷப் நஸீர் வேற்புமனு தாக்கல் செய்துள்ளதை படத்தில் காணலாம்.

(படம்:பாரா தாஹீர்)

# ஒனுவிலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கு வரவேற்பு

(இஸட் ஏ ரஹ்மான்

புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலய 16 வயதுக்குட்பட்ட காற்பந்தாட்ட அணி அகில இலங்கை ரீதியான காற்பந்தாட்ட போட்டியில் செம்பியனாகி வரலாற்று சாதனை படைத்தது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டி 14ம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்றது.

இதில் 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் வியாவிழன் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப்பலப்பரீட்சையில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் அணியினர் 02 : 01 கோலினால் வெற்றி பெற்று செம்பியனாது.இந்த வெற்றிக்கு வழி அமைத்த வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு இவ் வெற்றியைப் பெற உறுதுணையாய் இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக பாடசாலையின் அதிபர் திரு. ஏ.ஜே.எம். இல்ஹாம் அவர்கள் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றார்.



எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பாக மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் சிங்கள திரைப்பட நடிகர் சசீ விஜேந்திர மற்றும் அமைச்சர்களான திசாநாயக்க, திருமதி வாசலே ஆகியோருடன் கிளை காரியிலயமொன்றை திறந்து வைத்தை படத்தில் காணலாம்.

(படம்: ஜலீல்)

# களுத்துறை மாவட்டத்தில் ஐந்து தேசிய பட்டியல் வேட்பாளர்கள் நியமனம்

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

களுத்துறை மாவட்டத்திலிருந்து ஐந்து பிரமுகர்கள் நான்கு பிரதான கட்சிகளில் தேசிய பட்டியல் வேட்பாளர்களாக பெயரிடப்பட்டுள்ளனர். எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கியுள்ள தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி போன்ற சார்பில் இந்த தேசிய பட்டியல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்திலிருந்து இரண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் பாராளுமன்ற தேர்தலுக்கான 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுக்கான




தேசிய பட்டியலுக்கு குறிப்பிட்ட கட்சிகளின் வேட்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மர்ஜான் பளீல், அப்துல் பதாஹ் முஹம்மத் இக்ராம், ஹிஷாம் சுஹைல் மற்றும் ஹபீஸ் மரிக்காரும் ஆகியோர் தேசிய பட்டியல் வேட்பாளர்களாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் ரொஷான் ரணசிங்க களுத்துறையில் வேட்பு மனு தாக்கல்

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் முன்னால் விளையாட்டுத்துறை அமைச்சரும் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் ரணசிங்க களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார். சர்வஜன பலய கட்சியின் தலைமை வேட்பாளராக களமிறங்கியுள்ள இவர் வேட்பு மனு தாக்கல் செய்த பின் கட்சியின் வேட்பாளர்களுடன் அலுத்கம கந்தே கவிகாரை மற்றும் சரிக்கமுல்ல சிரி நன்தன புரான விகாரைக்குச் சென்று சமய வழிபாட்டில் கலந்து கொண்ட பின்னர் தேரர்களின் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

# தபால் ஊழியர்கள் கௌரவிப்பு






(பாரா தாஹீர்)

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி மாவனல்லை கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட, தபால் ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வொன்று மாவனல்லை தபாற்கந்தோர் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ் நிகழ்வில் மாவனல்லை தபால் அதிபர் ஆர். எம். சிரியானி சந்திரகாந்தி செனவிரத்ன, தபால் ஊழியர்களும், இலங்கை ஜமாஅதே இஸ்லாமி மாவனல்லை கிளையின் பொறுப்பாளர் எஸ். ஐ.எம். பஸ்மி, குழுவினரும் கலந்து சிறப்பித்தனர். இவ் நிகழ்வில் தபால் ஊழியர்களுக்கு நினைவு சின்னம் வழங்கி வைக்கப் பட்டதோடு காகிதாகிகள் மற்றும் ஊழியர்களுக்கு கடிதங்கள் பகிர்ந்தளிப் பதற்கான பைகளும் வழங்கப்பட்டன.

# காலி கோட்டை இப்றாஹிமியாவில் மீலாத் விழா நிகழ்வு




(பீ.எம்.முக்தார்)

இறைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டி காலி கோட்டை இப்றாஹீமியா அரபுக் கல்லூரியில் மாபெரும் மீலாது விழா கலாபீட மண்டபத்தில் (06) நடைபெற்றது. கலாபீட நிர்வாக சபைத் தலைவர் அல்-ஹாஜ் எம்.நுஸ்கி முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஷாதுலிய்யாத் தரிக்காவின் கலீபத்துல் குலபா காலி அலிய்யா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளர் அல்-உஸ்தாத் மௌலவி எம்.இஸட்.முஹம்மத் ஸூஹூர் (பாரி) பிரதம அதிதியாகவும் மாத்தறை மின்னத்துல் பாஸியா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ரயீஸூல் முகத்தம் மௌலவி அஸ்ஸெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) விசேட பேச்சாளராகவும் கலந்து கொண்டனர். கலாபீட பணிப்பாளரும் கொழும்பு அஜ்வாத் அல்பாஸி அரபுக் கல்லூரி விரிவுரையாளருமான ரயீஸூல் முகத்தம் மௌலவி எம்.எப்.எம். பாஸில் (பஹ்ஜி) அதிபர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி முகம்மத் ரஸூக் (பஹ்ஜி) ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் கல்லூரி மாணவர்களிடையே தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் பேச்சுப்போட்டி கஸீதா உட்பட பல்வேறு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இவ் விழாவில் அஸ்ஸெய்யித் முபாரக் மௌலானா உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், உலமாக்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அடிக்கல் நாட்டு விழா





(இக்பால் அலி)

குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேசத்தில், கும்பலங்கை ஹமீதியா மகா வித்தியாலயத்தில் நிலவுகின்ற வகுப்பறை இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக குவைட் நாட்டுப் பிரதிநிதியுடன், குவைட் து துரக அனுசணையுடன், அல் - ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் ஊடாக புதிய இரண்டு மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எஸ். எம். எம். அதிபர் இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்கிழ்வில் விடேச அதிதிகளாக அல் - ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் செயலாளர் எம். ஏ. ஏ. நூருல்லாஹ் மற்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் எம். எம். முஹமட் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கும்பலங்க கல்வி, கலாசார சமூக நல அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் ஏ. எல். எம். நௌபர், ஊர் பிரமுகர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச சிறுவர் தினப் போட்டியில் ஐந்து வெற்றியாளர்கள்!

(எம்.ஜே.எம். தாஜுதீன் )

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பலகத்துறை கலை இலக்கிய வட்டம் நடத்திய சிறுவர்களது ஆளுமைகளுக்கு களம் அமைக்கும் கலைப் போட்டியில் 5 சிறுவர்கள் வெற்றியாளர்களாக இன்று (09. 10. 2024) அறிவிக்கப்பட்டனர். இரண்டு நிமிடங்களுக்கான வீடியோ பதிவில் அடங்கக் கூடியதாக கவிதை, பாடல், ஓரங்க நாடகம் மற்றும் கதை என்பன சிறுவர்களிடமிருந்து போட்டிக்காக வரவேற்கப்பட்டன. 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட இப்போட்டியில் 76 சிறுவர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதாக பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் செயலாளர் எம்.ரி.எம் சைலாஸ் தெரிவித்தார். போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர் ஐவருக்கும் நீர் ஸகொழும்பு கொப்பரா சந்தியில் இயங்கும்



'கெஷூவல் லுக்' (Casual look) ஆடையகம் பரிசுகளை வழங்க முன் வந்துள்ளது. சிறுவர்களின் அபாரத் திறமை கண்டு தாம் வியப்படைவதாகவும் அவர்களுக்குரிய பரிசுகள் விரைவிலே வழங்கப்படும் என்றும் 'கெஷூவல் லுக்' உரிமையாளர் எம் எம் ரிஸ்வான் தெரிவித்தார்.

**பரிசுகள் பெறுபவரின் விபரங்கள் வருமாறு**

முதலாம் பரிசு
எம். எம். ஆஸியா, தரம் 06
அல்பலாஹ் கல்லூரி.

இரண்டாவது பரிசு
எம். எஸ். நுஹா, தரம் 06
அல்பலாஹ் கல்லூரி.

மூன்றாவது பரிசு
அப்ரின் ஹனா, தரம் இரண்டு
அல்பலாஹ் கல்லூரி.

நான்காவது பரிசு
பாத்திமா சப்ரா, தரம் 6
அல்ஹிலால் தேசியகல்லூரி
நீர் கொழும்பு.

ஐந்தாவது பரிசு
எம்.ஆர். தானியா,
தரம் ஒன்று
அல்பலாஹ் கல்லூரி.

# ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்வதில் வீட்டுச் சூழலும் பெற்றோரும் ஆற்ற வேண்டிய மகத்தான பங்களிப்புகள்

**பிஸ்தாமி அஹமத்**

ஒழுக்க விழுமியங்களை போதிக்கின்ற, பிள்ளைகளுக்கான முன்மாதிரிகளை காட்டுகின்ற பேணுகின்ற முதல் இடமாக வீடு அமைய வேண்டும். மறுபக்கம் ஒழுக்க விழுமியங்களை பேணி வளர்த்து விருத்தி செய்ய வேண்டிய கடப்பாட்டை பெற்றோர் எடுக்க வேண்டும்.

வீட்டுச் சூழலும் ாழஅந நளெசைழஅெநவெ வீட்டுச் சூழலில் பெற்றோரும்ியசநவெ யனெியசநவெைெ ளவலடந காட்டாத அவதானிக்காத observation வளர்ச்சி விருத்தி அடைய செய்வதற்கு பங்களிக்காத ஒழுக்க விருத்தியை வெளிச்சூழலில் யாராலும் செய்ய முடியாது


இன்று உலக மனநல தினம். ஒழுக்க விருத்திக்கு ஆளான பிள்ளைகளை தவிர உள நலத்தில் மேம்பட்ட பிள்ளைகளை, மனிதர்களை காண முடியாது.

ஒழுக்கவிருத்தி ஏற்பட்டால் மனநலம் ஏற்படும். ஒழுக்க விருத்தியும் மனநலமும் இணைகின்ற இடத்தில் சுய கட்டுப்பாடு ஏற்படும். அங்கு தோல்வி மனப்பான்மை விரக்தி ஏற்படாது. வாழ்வின் சகல சவால்களையும் சமாளிக்கின்ற, எதிர்கொள்கின்ற, சமநிலைப்படுத்தி நோக்குகின்ற ஆற்றல் விருத்தி அடைந்து இருக்கும்

பாடசாலையில் மாணவர்களிடம் ஒழுக்க விருத்தி தணிவது என்பது குறைவது என்பது அவர்களது கற்றல் வாழ்வை மாத்திரமல்ல எதிர்கால வாழ்வையும் ஆளுமைக் குறைபாடுகளையும் ஆளுமை சிதைவையும் ஏற்படுத்தும். கிட்டிய எதிர்காலத்தில் அவர்கள் சமூக விரோதிகளாக உருமாற்றம் அடையவும் சமூகத்துக்கு மிகப்பெரும் ஆபத்தாக மாறவும் இது வழியமைக்கும்.

இதற்கு பாட சாலைகள் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது. குற்றம் சாட்டவும் முடியாது விமர்சிக்கவும் விரல் நீட்டவும் முடியாது. அவர்களின் தலையில் மாத்திரம் சுமத்தி சமூகத்தின் பொறுப்பை லாவகமாக வசதியாக மறந்து விடவும் முடியாது.

சிறந்த ஒழுக்க விழுமியங்கள் பண்பாடுகள் நடைமுறைகள் இறுக்கமான சட்ட திட்டங்கள் எல்லாம் இருக்கின்ற பட்சத்தில் வீதியிலும் வீட்டிலும் கட்டுப்பாடற்ற பிள்ளைகளது சுதந்திரத்திற்கு கட்டுப்பாடு மட்டுப்பாடு விதிக்காமல் திறந்து கொடுத்திருக்கின்ற நிலையில் ஆடவும் பாடவும் தத்தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும்



ஆண் பெண் கலப்புக்கும் மேலைத்தேய கலாச்சாரத்துக்கும் என வேண்டிய தளர்வுகளை உரிமையை கொடுத்துவிட்டு சமூகம் என்று வருகின்ற பொழுது மாத்திரம் சமூகத்திலே இன்னின்ன கலாச அரசியல் விளைவுகள் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன எனக்கு ஒருவரே படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் எனும் கூற்றுக்கு இணையானது.

வீட்டுச்சூழல் தராத ஒழுக்க விருத்தியை பாடசாலைச் சூழலில் எதிர்பார்க்க முடியாது. அதே நேரம் வீட்டுச் சூழல் தந்த பக்குவத்தை பாதுகாப்பை கவனயீர்ப்பை பெற்ற மாணவப் பரம்பரை தத்தமது ஒழுக்கவிருத்தியை பாடசாலையிலும் சமூகத்திலும் நிச்சயம் பேணி வரும்.

சமய ஈடுபாடும் ஒழுக்கவிருத்தியும் ஒன்றில் ஒன்று தங்கி இருக்கக் கூடியவை. கடவுள் நம்பிக்கை மேம்பட்ட இடத்தில் இருக்கும் ஒருவரிடம் ஒழுக்கவிருத்தியும் மேம்பட்டிருக்கும். கல்வித் திருப்தியும் உயர்ந்த நிலையில் இருக்கும். அவர்களிடமிருந்து சமூக விரோத செயல்கள் சமூகத்தை தாரை வார்க்கின்ற சிதைக்கின்ற பாழ்படுத்துகின்ற மாசுபடுத்துகின்ற எந்த ஒன்றும் வெளிவராது.

அதேநேரம் பாடசாலையில் தான்தோன்றித்தனமான சுதந்திரம் ஆடல் பாடல் கொண்டாட்டம் வினோதம் உடைய அமைப்பு சிகை அலங்காரம் தொலைபேசி பாவனை நட்பு வட்டாரங்களின் ஒன்று கூடல்கள் போன்றவற்றில் மேலத்தேய கலாச்சார பின் புலம் கொண்ட தன்மை காணப்படுமாயின் பாடசாலை தரப்பும் ஆசிரியர்களும் மிகவும் சிரமப்பட்டு கட்டிய கட்டடத்தை

குட்டிச் சூழலும் பொது வழியும் தகர்த்து விட்டால் அதற்கு பாடசாலை பொறுப்பேற்க முடியாது.

மாணவர்களது ஒழுக்க விருத்தியை சிதைக்கின்ற தகர்க்கின்ற சுதந்திரமாக விடுகின்ற இந்த செயற்பாடுகளுக்கு மாலை நேர வகுப்பு கலாச்சாரம் அதேபோல சர்வதேச பாடசாலை கலாச்சாரம் எத்தகைய பங்களிப்புகளை வழங்குகின்றன என்பது ஆய்வுக்குரிய விடயம்

எது எப்படியோ வீட்டில்

எனவே மாணவத் தலை முறை இளம் தலைமுறை கணவன் மனைவி பெற்றோர் சிறார்கள் என சகலரிடத்திலும் ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய ஒழுக்க சீர்கேடுகளுக்கு சமயம் சார்ந்த விழிப்புணர்வு முக்கியம் என போலி கோஷங்களை வாதங்களை எடுத்துக் கொண்டு வருவது எந்தளவு தூரம் யோக்கியதையானது ஆரோக்கியமானது குள்ள நரித்தனமானது என்பதனை சமூகம் தான் சிந்தித்து விழிப்புணர்வோடு அலசி ஆராய வேண்டும் தீர்மானம்

---

## மவ்பிம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுக கப்பல் துறை இராஜாங்க அமைச்சருமான மர்ஹூம் எம்.ஈ.எச்.மஹ்ரூப் அவர்களின் புதல்வியும் இக்கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளருமான றோஹினா மஹ்ரூப் எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களில் ஒருவராக போட்டியிடுகிறார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சுயேட்சை வேட்பாளர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்த இவர் தேர்தலின் பின் மவ்பிம ஜனதா கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க இக்கட்சியில் இணைந்து போட்டியிடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர சிறந்த ஆளுமை மிக்க தலைவர் எனக் கூறும் இவர் இக்கட்சியின் ஏனைய தலைவர்களும் தனது அரசியல் பயணத்திற்கு தரும் ஆதரவு திருப்தியானதாக இருப்பதாகவும் இக்கட்சியின் மூலம்தன் தொகுதியின் மக்களுக்கு தனது தந்தை விட்டு சென்ற சேவைகளை தொடர்வதே தனது இலட்சியம் எனவும் அவர் தெரிவித்தார்.

---

**2024 பாராளுமன்றத் தேர்தல்...**

## இரட்டை இலைச் சின்னம். ஜனநாயக ஐக்கிய முன்னனி

### வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர்



முஹம்மது கௌது நௌபல் மன்னார் மாவட்டம்.முசலி பிரதேச கொண்டுச்சி கிராமத்தில் 1983.06.11 பிறந்தவர் 1990 உள்நாட்டு கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் திகழி கிராமத்தில் வசித்து வந்ததோடு 2001சாதாரன தரம் வரை திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றதோடு அதன் பின்னர் தனியார் துறை மூலம் கொழும்பிலே உயர்கல்வி கற்றதோடு.

மருந்தக விற்பனைக்கல்வியிலே (pharmacy) பயிற்சியை முடித்து.

தொடர்ச்சியாக மருந்தக (pharmacy) விற்பனைபுரிபவரும்.

பல அரசியல் சார்ந்த விடையங்களில் சமூக சிந்தனையுடனும் பங்காற்றி வருபவருமாவார்.


தேர்தல் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:

070 239 7210





# ஈரான் - இஸ்ரேல் இடையேயான போர் சூழலில் என்ன நடக்கும்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



ஈரான் யோசிக்க முடியாத வகையில்.. யோசிக்க முடியாத இடத்தில் அவர்களை அடிப்போம். அவர்கள் முடிவுகளைப் பார்த்து ஆச்சர்யம் அடைவார்கள்.. அதிர்ச்சி அடைவார்கள், என்று இஸ்ரேல் படை வீரர்களுக்கு ஆற்றிய உரையின் போது ராணுவ துறை அமைச்சர் யோ கேலண்ட் கூறி உள்ளார்.எங்களைத் தாக்குபவர்கள் பாதிக்கப்படுவார்கள் மற்றும் அதற்குரிய விலையைக் கொடுப்பார்கள் என்று உலகத்திற்கு தெரிய வேண்டும். அதை தெரியப்படுத்தும் விதமாக இந்த தாக்குதலை நடத்துவோம், என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் மேலும் தெரிவித்து உள்ளார். லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்லாஹ்வின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை இஸ்ரேல் கொன்றதற்கு பதிலடியாக, அக்டோபர் 1ம் தேதி ஈரான் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று அறிவித்து உள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான் சில நாட்களுக்கு முன் இஸ்ரேல் அமெரிக்கா இடையே பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இஸ்ரேல் அமெரிக்கா இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில்.. ஈரானை எப்படி தாக்க வேண்டும்.. எங்கே தாக்க வேண்டும்.. என்று பதிலடி கொடுப்பது பற்றி ஆலோசனைகள் செய்யப்பட்டு உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுடன் இதை பற்றி ஆலோசனை செய்தார். ஈரானுக்கு எப்படி பதிலடி கொடுக்க வேண்டும்.. எப்போது தாக்க வேண்டும் என்பது பற்றி தொலைபேசி வழியாக பேசினார். இந்த ஆலோசனை 50 நிமிடங்கள் நீடித்தது. வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் முயசநைெ துநயெ- “ைநசசந வெளியிட்ட செய்தியில், ” இரண்டு நாட்டு தலைவர்களின் பேச்சு நேரடியாகவும் மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. மேலும் இரு தலைவர்களும் பல விஷயங்களில் தங்கள் கருத்து வேறுபாடுகள் குறித்து வெளிப்படைத்தன்மையுடன் பேசினர். ஈரானுக்கு எப்படி பதிலடி கொடுக்க வேண்டும்.. எப்போது தாக்க வேண்டும் என்பது பற்றி பேசினர்.

இஸ்ரேலை அடக்கிவைத்த அமெரிக்கா உள்ளிட்ட கூட்டணி நாடுகள், இந்த முறை அந்த அளவுக்கு அந்த நாட்டைக் கட்டுப்படுத்தவில்லை. ஈரானின் அணுசக்தி மையங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதில்தான் தங்களுக்கு உடன்பாடில்லை என்று கூறும் அமெரிக்க அதிபா ஜோ பைடன், எரிசக்தி மையங்களில் தாக்குதல் நடத்துவது குறித்து இஸ்ரேலுடன் ஆலோசனை நடத்திவருவதாகக் கூறியிருக்கிறார். அதுமட்டுமின்றி, ‘தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது’ என்று வழக்கமான வசனத்தை உதிர்த்து இஸ்ரேலின் பதிலடிக்கு மறைமுகமாக இசைவு தந்திருக்கிறார்.

எனவே, கடந்த முறை போலின்றி ஈரான் மீது இஸ்ரேல் தீவிரமான தாக்குதலை நடத்தும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இஸ்ரேல் ராணுவத் தளபதிகள் ஆலோசனை நடத்திக்கொண்டிருப்பது ஈரானைத் தாக்குவதா, வேண்டாமா என்பதாக இருக்காது, எப்படியெல்லாமல் கடுமையாக தாக்குதல் நடத்துவது என்பதாகத்தான் இருக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.

இஸ்ரேல் தாக்குதல் ஆபத்தானதாகவும், துல்லியமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆச்சரியமாகவும் இருக்கும். என்ன, எப்படி நடந்தது என்று அவர்களுக்குப் புரியாது என்று எங்களிடம் இஸ்ரேல் தெரிவித்து உள்ளது. இதை பற்றி ஆலோசனைகளை செய்து இருக்கிறோம், என்று அவர் கூறி உள்ளார்.சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு ஈரான் முக்கியமான எச்சரிக்கையை விடுத்துள்ளது. ஈரானுக்கு எதிராக வளைகுடா நாடுகளின் வான்வெளியை இஸ்ரேல் பயன்படுத்த அனுமதிப்பது ”ஏற்றுக்கொள்ள முடியாதது” என்று ஈரான் எச்சரித்துள்ளது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் தலைவரின் செயல்பாடுகள் குறித்து நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த தாக்குதல் முழுமையாக யுஐ தாக்குதலாக இருக்கும் என்று நம்புவதற்கு அதிக அளவில் ஆன வாய்ப்புகள் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது ஈரான் ராணுவம் திணறக் கூடிய அளவில் ஆன ஒரு புதிய தாக்குதலை நாம் நிகழ்த்த போகிறோம் என்று இஸ்ரேலிய அரசு கூறி உள்ளது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

அதேநேரத்தில் ஈரான் இது போன்ற நிலைமைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு தான் செயல்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.ஆனால் இஸ்ரேலிய ராணுவம் தாக்குதல் இதுவரையில் யாரும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நிலைமையை முற்றிலுமாக மாற்றி அமைத்துள்ளது என்பது தான் தற்போதைய நிலையாக உள்ளது.

ஈரானின் அதிபர் மற்றும் ஈரான் உயர் மட்ட தலைவர் செய்யத் அலி கொமேனி இந்த போருக்கு முழு அளவிலான உத்தரவை வழங்கிய நிலையில் தான் தற்போது போர் குறித்த பரபரப்பான சூழலை நாம் காண கூடியதாக இருக்கிறது. அதேநேரத்தில் ஈரான் மிகுந்த எச்சரிக்கையை இஸ்ரேலிய ராணுவத்திற்கு விடுத்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இஸ்ரேல் பல் வேறு தொழில்நுட்ப கட்டமைப்புகளை உள்வாங்கி தாக்குதலை நடத்த கூடிய அளவில் உள்ளது. அதாவது சைபர் தாக்குதல்களைத் நடத்தி ஈரானின் கணனி சிஸ்டத்தை முழுமையாக குழப்பம் அடைய செய்யக்கூடிய ஆபத்தை உருவாகலாம். அதேநேரத்தில் AI தொழில்நுட்ப கட்டமைப்பு மூலம் ஈரானின் தலைவர்களை படுகொலை செய்ய முயற்சி செய்யலாம்.தீவிரமான நச்சு தன்மை கொண்ட ஆயுதங்களை பயன்படுத்த அதிகம் வாய்ப்பு உள்ளது . ஆனால் இத்தனை ஆபத்தான தாக்குதலை ஈரான் சந்திக்க நேரிடும் என்பதை தெஹ்ரான் உள்ள ராணுவ தலைமை முழுமையாக உணர்ந்து கொண்ட நிலையில் தான் இஸ்ரேலிய ராணுவ முழுமையாக ஒடுக்கும் நோக்கில் இது போன்ற போரை நடத்த முடிவு செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் 9 மில்லியன் மக்கள் தொகை மற்றும் மிகப் பெரிய அளவில் ஆன நிலப்பரப்பை உள்ளடக்கிய தேசமாக இருக்கிறது. அதே நேரத்தில் ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் தொழில் நுட்பத்தில் மிகப் பெரிய அளவில் ஆன வெற்றியை பெற்றதன் விளைவாக ரஷ்யா உக்ரைன் போரில் ஈரான் ஆயுதங்களை தான் பயன்படுத்தியது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஈரானின் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை முடக்கி விடவே யூத சியோனிசம் சார்ந்த கொள்கையை கடைபிடிக்கும் பெஞ்சமின் நிதான்யாகு தலைமையிலான அரசு முயலும் நோக்கில் தான் அமெரிக்கா இதற்கு முழுமையான ஆதரவை எல்லா நிலைகளிலும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. .

ஈரானின் நோக்கம் என்பது அரபுகள் பிராந்தியத்தில் யூதர்கள் வரம்புகள் இல்லாமல் செயல்படுவதை தடுக்கவேண்டும் என்றும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை மீட்டு கொடுக்கவே இது போன்ற போரினை நடத்தி வருகின்றது. அதேநேரத்தில் ஈரான் தனக்கு வலிமை வாய்ந்த பிற சக்திகளையும் உருவாக்கி வைத்துள்ளது.குறிப்பாக ஹிஸ்புல்லாஹ், ஹமாஸ், ஹொதிக்கள் மற்றும் இஸ்லாமிய கூட்டு ஆயுத குழுக்கள் ஈரானின் தீவிர ஆதரவாளர்கள் ஆக செயல்படுவதை நாம் காண முடிகிறது.

இதற்கிடையில் இஸ்ரேல் நாட்டின் கடும் போக்கு அரசியல் தலைவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய கிழக்கை அடியோடு மாற்றியமைக்க இஸ்ரேலுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஈரானின் அணு ஆயுத நிலைகளையும் எரிசக்தி நிலையங்களையும் நிாமூலமாக்கி அந்த நாட்டு பயங்கரவாத அரசுக்கு மரண அடி கொடுக்க வேண்டிய கவிட்டது. ஈரான் என்ற ஆக்டோபஸின் கரங்களை (ஹமாஸ், ஹிஸ்புல்லா) முடக்கிவிட்டோம். இனி ஆக்டோபஸின் தலையை வெட்டியாக வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த வரலாற்றில் எப்போதாவது ஒருமுறைதான் வாய்ப்பு கிடைக்கும். அந்த வாய்ப்பை தவறவிடக் கூடாது’ என்று பெஞ்சமின் நிதான்யாகுவை உசுப்பேற்றி விடுவதையும் நாம் காண கூடியதாக இருக்கிறது.

தங்கள் நாட்டின் மீது ஈரான் 180 ஏவுகணைகளை சரமாரியாக வீசியதற்குப் பிறகு இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நாஃப்டாலி பென்னட் கூறியது இது. இஸ்ரேலின் தற்போதைய பிரதமரும், ஏவுகணைத் தாக்குதலை நடத்திய ஈரானுக்கு தகுந்த பதிலடி கிடைக்காமல் போகாது என்று சூளுரைத்துள்ளார்.

ஆனால், மற்ற தருணங்களைப் போல இதெல்லாம் வெற்று வார்த்தைகள் இல்லை. கடந்த ஏப்ரலில் சுமார் 200 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வீசி ஈரான் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு இதேபோல் சபதமெடுத்த இஸ்ரேல், விமானம் மூலம் ஒப்புக்கு ஒரே ஒரு தாக்குதலை நடத்திவிட்டு, அதோடு விட்டுவிட்டது. ஆனால், இந்த முறை அப்படி நடக்காது என்கிறாாகள் இந்த விவகாரத்தை உற்று கவனித்து வருபவர்கள். ஆகவேதான் மத்திய கிழக்கு பதட்டம் நிறைந்த போர் கள முனையாக மாறி வருவது ஆபத்தான ஒன்றாகும்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனீயே, ஹிஸ்புல்லா தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் படுகொலைக்கு பதிலடியாக இஸ்ரேலின் ராணுவ நிலைகளைக் குறிவைத்து மட்டுமே ஏவுகணைகளை வீசினோம். இது எங்கள் முழு ராணுவ பலத்தின் ஒரு கொசுறு மட்டுமே. பதிலுக்கு இஸ்ரேலும் தாக்குதல் நடத்தினால் எங்களின் எதிாவினை மிக மோசமானதாக இருக்கும்’ என்று இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்திய உடனேயே ஈரான் கூறிவிட்டது.

அதாவது, இத்துடன் தங்களுக்கும் இஸ்ரேலுக்கும் கணக்கு தீர்ந்துவிட்டது் இதற்கு மேலும் இஸ்ரேல் வந்தால் ஒருகை பாாப்பதற்குத் தயாராகவே இருக்கிறோம் என்று ஈரானும் தீர்க்கமாகச் சொல்லியிருக்கிறது. வெள்ளிக்கிழமை நடைபெற்ற தொழுகைக் கூட்டத்தில்கூட ஈரான் தலைமை மதகுரு அயதுல்லா கொமேனி அதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

எனவே, இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் நேரடிப் போர் மூள்வதற்கான அபாயம், இந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தற்போது மிக நெருக்கத்தில் உள்ளது.

எனவே, விரைவில் ஈரானின் பல்வேறு பகுதிகளில் ஏவுகணைகள் மற்றும் விமானங்கள் மூலம் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும். இருந்தாலும், தாக்குதலுக்காக எந்தெந்த நிலைகளை இஸ்ரேல் தேர்ந்தெடுக்கும் என்பதில்தான் இந்தப் போர் எவ்வளவு மோசமானதாக உருவெடுக்கும் என்பது இருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும், ஈரானின் அச்சுறுத்தலில் இருந்து தங்களுக்கு இஸ்ரேலால் நிரந்தரப் பாதுகாப்பை பெற்றுவிட முடியாது் ஈரானும் உலக வரைபடத்திலிருந்து இஸ்ரேலை அழித்துவிட முடியாது என்கிறார்கள் நிபுணர்கள்.

அந்த வகையில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் போர் ஏற்பட்டால் அதில் யாா வெற்றி பெறுவது யார் என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால், இந்தப் போரால் இரு நாட்டு மக்களின் நிம்மதி, பிராந்திய அமைதி, உலகப் பொருளாதாரம் சீரழியும் என்பது மட்டும் நிச்சயம்.

இலைமறை காய்மறையாக உள்ள ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை மேலும் துரிதப்படுத்தும். ‘எங்கள் அணுசக்தி திட்டங்கள் அணு

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

**இஸ்ரேல்...**
(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை' என இன்றுவரை கூறிவரும் ஈரான், அணுகுண்டு சோதனையை நடத்திவிட்டு, இஸ்ரேலின் தாக்குதலைக் காட்டி அதை நியாயப்படுத்தும். இதனால்தான் ஈரான் அணுசக்தி நிலையங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக் கூடாது என்று அமெரிக்கா கூறுகிறது. எனவே, அத்தகைய தாக்குதலை நடத்த இஸ்ரேலும் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்கும் என்று கருதப்படுகிறது.

**ஈரானின் எதிர்வினை**

ஈரானால் ராணுவ ரீதியில் இஸ்ரேலை தோற்கடிக்க முடியாது. பல ஆண்டுகளாகத் தொடரும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக அதிநவீன கருவிகளைப் பெற முடியாத பழைய விமானப் படைதான் அந்த நாட்டிடம் இருக்கிறது. அதன் வான்பாதுகாப்பு தளவாடக் கட்டமைப்பும் மிக பலவீனமானது.

இருந்தாலும், பொருளாதார நெருக்கடிக்கு இடையிலும் அந்த நாடு உலகத் தரம் வாய்ந்த ஏவுகணைகள், வெடிபொருளை ஏந்திச் சென்று இலக்கின் மீது துல்லியமாக மோதி நாசமாக்கும் அதிநவீன ட்ரோன்கள் ஆகிவற்றை உருவாக்கி வைத்திருக்கிறது.

முக்கியமாக, மத்திய கிழக்கு பிராந்தியம் முழுவதும் ஹிஸ்புல்லா, ஹமாஸ், ஹூதி கிளர்ச்சிப் படை என ஏராளமான ஆயுதக் குழுக்களை ஈரான் உருவாக்கி, கொம்பு சீவி வைத்திருக்கிறது. போர் என்று வந்தால் இதுபோன்ற தங்கள் நிழல் படைகளைக் கொண்டு ஈரானால் என்ன செய்ய முடியும் என்பதற்கு சவூதி அரேபியா எண்ணெய்க் கிணறுகளில் அந்த நாட்டைச் சேர்ந்த ஈரான் ஆதரவு படையினர் கடந்த 2019-ஆம் ஆண்டு நடத்திய மிகப் பெரிய தாக்குதலே சாட்சி.

எனவே, போர் என்று வந்துவிட்டால் இஸ்ரேலை வெல்ல முடிகிறதோ, இல்லையோ, ஈரானால் அந்த நாட்டில் மிகப் பெரிய நாசத்தை உண்டுபண்ண முடியும். ஏற்கெனவே, தங்களை இஸ்ரேல் தாக்கினால் அதற்கான பதிலடி 'மரபுவழி' போராக இருக்காது என்று கத்தார் மூலம் அமெரிக்காவிடம் ஈரான் எச்சரித்திருக்கிறது. தங்களின் எதிர்த் தாக்குதலில் இருந்து பொதுமக்கள் கட்டமைப்புகளுக்கு விதிவிலக்கு இல்லை என்று ஈரான் கூறியிருக்கிறது.

கடந்த அக். 1-இல் இஸ்ரேல் மீது ஈரான் வீசிய ஏவுகணைகளில் ஃபட்டா ரகத்தைச் சேர்ந்தவை ஒலியைப் போல் சுமார் 15 மடங்கு வேகத்தில் பாயக்கூடிய ஹைப்பர் சோனிக் வகை ஏவுகணைகள். ராணுவ இலக்குகளை மட்டும் குறிவைத்து நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் ஏராளமான ஏவுகணைகளை இஸ்ரேலின் அதிநவீன வான்பாதுகாப்புத் தளவாடங்கள் இடைமறித்து அழித்தாலும், கணிசமான ஈரான் ஏவுகணைகள் அந்தத் தளவாடங்களை மீறி இலக்குகளைத் தாக்கியிருக்கின்றன.

ஈரானிடம் சுமார் 5,000 ஃபட்டா-2 ஏவுகணைகள் உள்ளதாக சில ஆண்டுகளுக்கு முந்தைய அமெரிக்க ராணுவ அறிக்கை கூறுகிறது. தற்போது அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம். எனவே, பொதுமக்கள் இருப்பிடங்கள் உள்ளிட்ட பகுதிகளில் ஃபட்டா-2 உள்பட மற்ற அதிநவீன ஏவுகணைகளை ஈரான் இன்னும் அதிக எண்ணிக்கையில் வீசினால், என்னதான் உலகின் மிகச் சிறந்த வான்பாதுகாப்புத் தளவாடங்களை இஸ்ரேல் வைத்திருந்தாலும் - அதன் விளைவுகள் மிக பயங்கரமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதை உணாத்துவதற்கான ஒரு முன்னோட்டமாகத்தான், பதிலடி கிடைக்கும் என்று தெரிந்தும் இஸ்ரேல் மீது ஈரான் 181 ஏவுகணைகளை வீசியிருக்கிறது.


இது போதாதென்று, போரின் எதிரொலியாக மத்திய கிழக்கு பகுதியில் ஏராளமாகக் குவிந்திருக்கும் அமெரிக்க ராணுவ நிலைகளும் ஈரான் நிழல் படைகளால் கடுமையான தாக்குதலுக்குள்ளாகும். ஏற்கெனவே, இந்தப் போரில் இஸ்ரேலுக்கு எந்த நாடாவது உதவினால், அதுவும் குறிவைக்கப்படும் என்று ஈரான் எச்சரித்திருக்கிறது. போர் என்று வந்தால் அமெரிக்கா உதவியில்லாமல் இஸ்ரேலால் செயல்பட முடியாது. எனவே, இஸ்ரேல்-ஈரான் போரில் மத்திய கிழக்குப் பகுதிகளும் வெகுவாக பாதிக்கப்படும்.


ஏவுகணைகள் ஒருபுறம் இருக்க, ஈரானின் இஸ்லாமிய புரட்சிப் படையிடம் சிறிய அளவிலான அதிவேக தாக்குதல் படகுகள் ஏராளமாக உள்ளன. இவற்றைக் கொண்டு அந்தப் படை வளைகுடாவில் இஸ்ரேல் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க கடற்படைக்கு தலைவலி கொடுக்கும். மேலும், உலகின் 20 சதவீத எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் முக்கிய கடல் வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையில் கடல் கண்ணிவெடிகளை வைத்து இஸ்லாமிய புரட்சிப் படையால் அந்த வழித்தடத்தை அடைக்கமுடியும். இது, சர்வதேச பொருளாதாரத்தை நிலைகுலையவைக்கும்.

இஸ்ரேல் ஒரு நாசகார ஆயுதங்களை பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் களை இதுவரை படுகொலை செய்து விட்ட நிலையில் இன்னும் அதன் இரத்த பலி குறையவில்லை என்பதை தான் நாம் அனைவரும் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. இந்த இரத்த வெறி அதிக காலம் தொடர வாய்ப்பே இல்லை. ஏனெனில் உலகில் எந்தவொரு சர்வாதிகார தன்மையை கொண்ட சக்திகளும் தொடர்ந்து நிலைத்து இருந்ததாக வரலாற்றில் எந்த ஒரு பதிவும் இல்லை. யூத சியோனிசம் சார்ந்த கொள்கையை கடைபிடிக்கும் பெஞ்சமின் நிதான்யாகு மற்றும் தீவிர வலதுசாரி சியோனிச சக்திகளின் வரம்பற்ற போக்கு முடிவுக்கு வர வேண்டிய களச் சூழல் தற்போது உருவாகியுள்ளது என்பதை நாம் மறுக்க கூடியதாக இல்லை. அதேநேரத்தில் ஈரான் மீது இஸ்ரேலிய ராணுவம் தாக்குதலைத் ஒரு வேளை தொடங்கினால் யூத தேசம் ஒரு வேளை அதன் அடையாளத்தை முழுமையாக இழந்து விடக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. அதேநேரத்தில் இந்த போர் தொடர கூடாது என்பதே மனித நேயம் மற்றும் மனித உரிமைகளை உயர்வாக எண்ணிக் வாழ்ந்து கொண்டு இருக்கும் அனைவரின் பிரார்த்தனையாக இருந்து வருகிறது என்பதே யதார்த்தமான உண்மையாகும்....!

# சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் ஞாபகார்த்த நூல் நிலைய திறப்பு விழா






(பேருவளை பீ.எம் முக்தார்)

தென்னிலங்கையின் மிகவும் பழைமை மிகு அரபுக் கல்லூரியான காலி கோட்டை அல்-பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரி சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் ஞாபகார்த்த நூல் நிலைய திறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி (2024-10-17) போயா தினம் பிற்பகல் 3:30 மணிக்கு நடைபெறும்.

கலாபீட நிர்வாக சபை தலைவர் அல்-ஹாஜ் எம். நுஸ்கி முஹம்மத் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் முஹம்மத் அஹ்ஸன் மரிக்கார் பிரதம அதிதியாகவும், ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவும், காலி அலியா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளருமான அல்-உஸ்தாத் மௌலவி எம்.இஸட். முஹம்மத் ஸ//ஹர் (பாரி) விஷேட அதிதியாகவும் கலந்து கொள்வர் என கலாபீட பணிப்பாளர் ரயீஸ /ல் முகத்தமுஷ்ஷாதுலி மௌலவி எம்.எப்.எம் பாஸில் (பஹ்ஜி) தெரிவித்தார்.

அதிபர் கலீபதுஷ்ஷாதுலி முஹம்மத் ரஸ/க் (பஹ்ஜி) யின் வழிகாட்டலின் கீழ் விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கிதாபுகள், ஹதீஸ் கலை நூல்களம் மற்றும் அரபு, தமிழ், சிங்களம், ஆங்கில நூல்களைக் கொண்ட வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த சேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் நூல் நிலையம் பல இலட்ச ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் பல அரபுக் கல்லூரிகள் உள்ள போதிலும் கூட பெறுமதி மிக்க அதிக நூல்களைக் கொண்ட ஓர் நூல் நிலையமாக இது திகழ்கிறது என கூறலாம்.

மர்/ஹும் ஒ.எல்.எம் மாக்கான் மாக்காரின் பெரு முயற்சியில் 1892 ஆம் ஆண்டு அதாவது ஹிஜ்ரி ஆண்டு 1310 இல் இந்த கலாபீடம் ஸ்தாபிக்கப்பட்டது. இவரது பாரியார் மர்/ஹுமா ஆமினா உம்மா பக்க பலமாக நின்று இதள்கு பூரண ஒத்துழைப்பு கொடுத்துள்ளார்.

ஆரம்பத்தில் இக் கலாபீடம் ஸ ராவியாவிலேயே இயங்கியுள்ளது. பின்னர் கலாபீடம் தற்போது அமைந்துள்ள காணியை அப்போது மர்/ஹும் ஒ.எல்.எம் மாக்கான் மாக்கார் மர்ஹூமா ஆமினா உம்மா தம்பதிகளின் புதல்வரான மர்ஹூம் ஸேர். முஹம்மத் மாக்கான் மாக்கார் மற்றும் மர்ஹூம்களான ஸம்ஸிதீன் மாக்கான் மாக்கார், அப்துல் வஹா த் மாக்கான் மாக்கார், முஹம்மத் ஸாலி மாக்கான் மாக்கார் ஆகியோர்கள் இணைந்து வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளனர்.

பின்னர் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு அரபுக் கல்லூ ரி இயங்க ஆரம்பித்தமை குறிப்படத்தக்கது.

நாட்டிற்கும், சமூகத்திற்கும் தலை சிறந்த இஸ்லாமிய புத்திஜீவிகளை அல்-பஹ்ஜத்துல் இப்ராஹிமிய்யா கலாபீடம் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விஷேட அம்சமாகும்.







திறப்பு விழாவில் அதிபர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம். ரஸூக் (பஹ்ஜி) பணிப்பாளரும், கொழும்பு உம்மு ஸாவியாவின் பேஷ் இமாமுமான ரயீஸுல் முகத்தம் மௌலவி எம்.எப். எம் பாஸில் (பஹ்ஜி) கலாபீட நிர்வாக சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஸேர். முஹம்மத் மாக்கான் மாக்காரது குடும்ப உறுப்பினர்கள், உலமாக்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொள்வர்.

பிரதம அதிதி, விஷேட அதிதி உட்பட பிரமுகர்கள் மத்ரஸா மாணவர்களினால் பைத் ஓதி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு நூல் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

# அரசியல் தலைமைகளை ஆட்டம் காண வைத்த பொதுத் தேர்தல் களம்



**எம்.எஸ். அமீர் ஹுசைன்**

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 22 மாவட்டங்களிலும் இருந்து பதிவு செய்யப்பட்ட 34 அரசியல் கட்சிகள் மற்றும் 80 சுயேட்சைக் குழுக்களில் மூலம் 8,388 போர் போட்டியிடுகின்றனர். 2024 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் 690 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு 74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பிரதான அரசியல் கட்சிகள் இறுதி நேரம் வரை கடுமையான போட்டிக்கும் நெருக்கடிக்கும் மத்தியில் வேட்பாளர்களை தெரிவு செய்து போட்டியிடுபவர்களது பட்டியல்களை தயார்படுத்தி இருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) ஐக்கிய மக்கள் சக்தி (சமகி ஜனபலவேகய) ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கூட்டணி, பொதுஜன பெரமுன, சர்வஜன பலய, வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சி உட்பட பிரதான அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களுமாக இவ்வாறு வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. ஏற்கனவே வேட்பாளர் பட்டியல்களில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்து இறுதி நேரத்தில் வெட்டிப்பட்டவர்கள் இப்போது பகிரங்கமாக கட்சிகளுக்கு ஏசிக்கொண்டு திரிய ஆரம்பித்துள்ளனர். அதே நேரம் 88 வருடங்களின் பின்னர் ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் ராஜபக்ஷ குடும்ப அங்'கத்தவர் ஒருவர் இல்லாமல் டீவட்புமனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அதே நேரம் நாமல் ராஜபக்ஷ பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய பட்டியலில் இடம்பெறுகின்றார். அவர் எந்த தொகுதியிலும் பொட்டியிடவில்லை. ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த பின்னடைவு காரணமாக ஏதாவதொரு தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவ நேரிட்டால் ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் எதிர்காலத்திற்கு படு தோல்வியாக அமையலாம் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து நாமல் ராஸபக்ஷ இவ்வாறான ஒரு முடிவை எடுத்திருக்கலாம்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவு ஜே.வி.பி. க்கு சாதாகமானதாக அமைந்து புதிய ஆட்சியொன்று அமையும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்பட்டதால் வேட்புமனு தாக்கலுக்கு முன்னர் பட்டியலை தயாரிப்பதில் இவ்வாறான நெருக்கடியை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. பட்டியல்களில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆதரரவு கட்சிகளது வேட்பாளர்களின் எண்ணிக்கை (கோட்டா) தேசிய பட்டியல் அசன பகிாவ்வு போன்ற விடயங்களில் நெருக்கடிகள் உருவாகி இருந்தன.

அதிலும் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டு வந்த தொகுதிகளில் செல்வாக்கு செலுத்தி வந்த அரசியல்வாதிகள் சிலர் அரசியலில் இருந்து ஒதுங்கும் நிலையை ஜனாதிபதித் தேர்தல் முடிவு ஏற்படுத்ததி இருக்கின்றது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனா, மஹிந்தா ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க, விமல் வீரவங்ச, லொஹான் ரத்வத்தை, போன்றவர்கள் இந்த தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தத்தமது முடிவுகளை மாற்றிக் கொண்டுள்ளனர். ஏற்கனவே ஜே.வி.பி. யில் இருந்து இரண்டாக பிளவடைந்து தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை அமைத்து பிரதான கட்சியாக கடந்த தேர்தல்களில் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடு கின்றார். அதே நேரம் விமலுடன் இணைந்து ஏதாவது இனவாத கருத்துக்களை கிளரி அரசியல் செய்வதை பொதுப் பன்பாக கொண்டிருந்த தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினராக இருந்த முஸம்மில் உட்பட அக்கட்சியீனு் ஏனைய மூன்று உறுப்பினர்கள் ஐ.தே.க. கூட்டணியில் இணைந்து பொட்டியிடுகின்றனர்.

ஏற்கனவே இந்த கட்சியுடன் இணைந்திருந்த விமல் வீரவங்ச அவரது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளமை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள திலித் ஜயவீர "விமல் எம்மோடு திருமணம் முடித்து விட்டு இன்னுமொருவரோடு காதல் பரிமாற்றம் செய்வது எப்படி" என்று கேள்வி எழுப்பி உள்ளார். அத்துடன் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் விமலை போன்றே திலித் ஜயவீரவுடன் இணைந்திருந்த வாசுதேவ நாணயக்காரவும் இம்முறை போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கி உள்ளடக்கி போட்டியிட சந்தர்ப்பம் வழங்குவதாக உறுதி வழங்கி இருந்த போதும் அந்த வாக்குறுதி மீறப்பட்டிருப்பதாக அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

எவ்வாறாயினும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சமகி ஜனபலவேகய கட்சி தோள்வியை சந்தித்ததற்கு இந்த பாடலி சம்பிக மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சியின் செயலாளர் தயாசிரி ஜயசேகர ஆகியோரின் இணைவும் ஒரு காரணம் என்று கூறலாம். கடந்த பல வருடங்களாக இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டி வெறுப்புணர்வை வளர்ப்பதிலும் நாட்டில் பல இடங்களில் முஸ்லிம் விரோத வன்முறைகள் இடம்பெறுவதற்கு இவர் காரணமாக இருந்தார். அத்தகைய ஒருவரை இணைததுக் கொண்டிருக்கும் சஜித்திற்கு அதரவு வழங்க வேண்டாம் என்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கடுமையான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டதால் கணிசமான அளவில் முஸ்லிம் வாக்குகள் ஜே.வி.பி. வேட்பாளர் வெறுப்புணர்வு, வீன் செலவினம், ஊழல், மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் இந்த பொதுத் தேர்தலிலும் என்.பி.பி. கூடுதலான ஆசன பலத்துடன் வெற்றிபெற்று பாராளுமன்ற அதிகாரத்தை கைப்பற்ற அடிப்படையாக அமைய இருக்கின்றது.

அதற்கு ஒத்திகையாக உயிர்த்த ஞாயிறு தற்கொலைத்த தாக்குதல், 2015 - 2019 காலத்தில் நிகழ்ந்த இலங்கை மத்திய வங்கியின் பிணை முற ஏல விற்பனை மோசடி உட்பட 07 வழக்குகளின் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. இதுவும் வரப்போகின்ற தோலை இலகுவாக வெற்றி கொள்ள முன்னெடுக்கப்படுகின்ற பிரசார தந்திரோபாயமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் 22 மாவட்டங்களிலும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள அநுரகுமார திசாநாயகா தலைமையிலான என்.பி.பி (ஜே.வி.பி) யின் போட்டியிட்டு அதிகாரத்தை கைப்பற்றி வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த விமல் வீரவங்ச இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளார். கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்காக பிரச்சார பீரங்கியாக செயற்பட்டு வந்த அவர் இவ்வாறான முடிவை ஏன் எடுத்தார் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

விமல் வீரவங்ச இந்த முடிவை எடுத்ததன் பின்னணியாக அவர் மீண்டும் தனது பழைய கட்சியான ஜே.வி.பி. யுடன் இணைந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் கரங்களை பலப்படுத்த பாடுபடும் அறிகுறிகள் தென்படுகின்றன. அது தொடர்பாக விமல் வீரவங்ச தெரிவிக்கையில் புதிய ஆட்சிக்காக மக்கள் வழங்கிய ஆணையை பாராளுமன்றத்திற்கு வெளியில் இருந்து பாதுகாப்பதற்காக பாடுபடப் போவதாக பெல்டி அடித்துள்ளார். ஏற்கனவே பாராளுமன்றத்திற்குள் இருந்து குரல் எழுப்பியதை விட பலமான முறையில் அநுரகுமார திசாநாயக் காவுக்கு மக்கள் வழங்கிய ஆணையை பாதுகாப்பேன் என்று தெரிவித்துள்ளார். அதே நேரம் அவருடன் இணைந்திருந்த உதய கம்மம் பிள்ளை திலித் ஜயவீரவின் தலைமையிலான சர்வஜன பலய என்ற ஜே.வி.பி. க்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார். அத்துடன் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த பின்னடைவுடன் இந்த தேர்தலில் நிலையான ஒரு அரசியல் கொள்கை அற்றவரா ஜே.வி.பி. யுடன் இணைந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார். அதனால் எந்த கட்சியிலும் போட்டியிடவில்லை.

அவ்வாறே ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய கட்சியுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வந்த ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவரான பாடலி சம்பிக ரணவக்கவும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டு இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கி உள்ளார். அதற்கான காரணம் பற்றி அவர் தெரிவிக்கையில் ஏற்கனவே 2024 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி சஜித்துடுன் இணைந்துகொண்ட போது செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை சமகி ஜனபலவேகய கட்சி மீறி இருப்பதாக குற்றம் சுமத்தி இருக்கின்றார். அந்த உடன்படிக்கைக்கு அமைவாக சமகி ஜனபலவேகய பட்டியலில் 11 மாவட்டங்களில் ஜாதிக ஹெலஉறுமய கட்சியின் வேட்பாளர் களையும் அநுரகுமார திசாநாயக்காவின் பக்கம் திரும்பியது எனலாம்.

தேர்தல் ஒன்று வரும் போது எதிர் தரப்பால் பரப்பப்படுகின்ற வெளிபார்வையில் தெரியக்கூடிய மக்களால் உண்மைத்தன்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத பிரச்சார உத்திகள் மக்கள் மத்தியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருவது இலங்கையின் அரசியலின் போக்காக இருந்து வருகின்றது. அந்த வகையில் ஜே.வி.பி. கையாண்ட தேர்தல் பிரசார தந்திரோபாயமான முஸ்லிம் தலைவர்கள் மீதான வெறுப்பை வளர்த்தல், அவர்களுக்கு எதிரான பகிரங்க எதிர்ப்பலைகள், கடந்த ஆட்சியாளர்களுக்கு எதிரான ஊழல் குற்றச் சாட்டுக்கள் என்பன கருப்பொருளாக அமைந்தன எனலாம்.

இம்முறை நடக்க இருக்கின்ற பொதுத் தேர்தலிலும் அதே பிரச்சார தந்திரோபாயம் தான் வேலை செய்யப்போகின்றது என்பது உறுதியாக தெரிகின்றது. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்ள சிங்கள மக்களின் வாக்குகளை தம்பக்கம் ஈர்ப்பதற்காக கோதாபய ராஜபக்ஷ அணி திட்டமமிட்ட அடிப்படையில் தேுசிய வாதம், பேரினவாதம், முஸ்லிம் விரோத செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை எந்தளவிற்கு வெற்றிகரமாக பயன்படுத்தி 69 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொண்டதோ அதே போன்று மறுபக்கமாக முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிரான பட்டியல்களில் மொத்தமாக 30 முஸ்லிம் பிரதிநிதிகள் அளவில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. இருந்தாலும் அத்தகைய பட்டியல்களின் அடிப்படையில் இந்த தேர்தல் முடிவுகளின் படி ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் ஜே.வி.பி. ஒட்டுமொத்மான வெற்றியை பெற்று ஆசனங்களை பெற்றால் மாத்திரமே ஒவ்வொரு தொகுதிக்கும் முஸ்லிம் அபேட்சகர்கள் பிரதிநிதிகளாக வரும் வாய்ப்பு இருக்கின்றது. மாறாக ஜே.வி.பி. ஒருபோதம் விறுப்பு வாக்கு கேட்பதில்லை. கட்சியின் சின்னத்திற்கே வாக்களிக்குமாறு தேர்தல் பிரச்சாரங்களில் கோரிக்கை விடுக்கின்றது. தேர்தல் முடிவுகளின் பின்னர் கிடைக்கின்ற ஆசனங்களின் எண்ணிக் கைக்கு அமைவாக அதன் மத்திய நிறைவேற்று குழுவே யார் பாராளுமன்றத்திற்கு போக வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கின்றது. அதன்படி எதிர்பார்ப்புடன் இருக்கும் வேட்பாளர்கள் அனைவருக்கும் உறுதியளிக் கப்பட்ட அடிப்படையில் வாய்ப்பு கிடைக்கும் என்பது சந்தேகமே.

ஏனைய கட்சிகளைப் பொருத்தவரையில் குறித்த மாவட்டத்தில் கட்சி வெற்றி பெற்று கிடைக்கின்ற ஆசனங்கள் அந்தந்த அபேட்சகர் பெற்றுக்கொண்ட விருப்பு

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...



**அரசியல்...**
(10ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளின் அடிப்படையில் கிடைக்கின்றன. அத்துடன் அந்த கட்சியில் தெரிவாகிய ஒரு உறுப்பினர் மரணமடைந்தால் அந்த பட்டியலில் அவருக்கு அடுத்ததாக விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளவரை அந்த வெற்றிட த்திற்கு உறுப்பினராக தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கின்ற நடைமுறை இருந்து வந்தாலும் ஜே.வி.பி. யில் அவ்வாறான அனுகுமுறை இல்லை. அதனால் நம்பி போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் காத்திரு க்கின்றது என்று எதிர்பார்ப்பு வைக்க முடியாது. எவ்வாறாயினும் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக ஏற்பட்டுள்ள மாற்றத்துடன் இடதுசாரி சோசலிச கட்சியொன்று ஆட்சி பீடம் ஏற மொத்த சனத்தொகையில் இடம்பெறுகின்ற முஸ்லிம் வாக்குகளும் பிரதான காரணமாக இருந்ததால் கடந்த பாராளுமன்றத்தில் இருந்த அளவிற்கு முஸ்லிம் பிரதிநிதித்துவம் இழப்பு இல்லாமல் கிடைப்பது உறுதிப்ப டுத்தப்பட வேண்டும்.

எவ்வாறானாலும் ஜே.வி.பி. ஏற்கனவே பெற்றுள்ள வெற்றியை இந்த பொதுத் தேர்தலில் பலமான முறையில் உறுதி செய்துகொள்ள அவசியமாக இருப்பது 113 இங்கு மேற்பட்ட அசன பலமாகும். ஆவ்வாறான ஒரு வாய்ப்பு கிடைக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வழங்கி இருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனால் அது ஜனாதிபதியாக தெரிவாகி இருக்கின்ற அநுரகுமார திசாநயக்காவுக்கு நல்ல பிடியாக அமைந்துவிடலாம். கடந்த சில தினங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களை கட்டுவாபிடிய தேவாலயத்திற்கு சென்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா சந்தித்து கலந்துரையாடினார். அந்த சந்திப்பின் போது பாதிக்கப்பட்ட மக்களது கேரிக்கையாக அமைந்தது இந்த தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதாகும். பாதிக்கப்பட்டு குடும்ப அங்கத்தவர்களை இழந்து மன விரக்திக்கு உள்ளாகி இருந்த பலர் அவர்களது உளக்குமுரல்களை ஜனாதிபதி என்றும் பாராமல் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி வெளிப்படுத்தினர்.

அவர்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா "நான் நீதிபதி அல்ல. தகவல்களை திரட்டல், சாட்சியங்களை பதிவு செய்தல் மற்றும் விசாரணை நடத்தல் என்ற அடிப்படையில் கிடைக்கும் முடிவுகளை வைத்தே இந்த தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க வேண்டும்" என்று சமயோசிதமாக பதிலளித்தார். அதே போன்று கடந்த ஆட்சி கால திருடர்களை பிடிப்பது, சூரையாடிய சொத்துக்களை மீண்டும் கொண்டு வருவது, நேர்மையான முறையில் அரச செலவினங்களை கட்டுப்படுத்தி வீன் விரயம் இல்லாத ஆட்சியை நிலைநாட்டுவது போன் முக்கியமான வாக்குறுதிகளை எதிர்வரும் ஐந்து வருட கால ஆட்சியில் நிறைவேற்ற வேண்டிய தார்மீக பொறுப்பு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா முன்னாள் இருக்கின்றது. அதனால் இந்த தேர்தலில் மக்கள் வழங்குகின்ற பலமான ஆதவுதான் அதன் அடுத்த கட்ட நகர்வை உறுதி செய்வதாக அமையும்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய வுடன் இணைந்திருந்த முன்னால் அமைச்சர்களான ரவுப் ஹக்கீம், ரிசாத் பதியுத்தீன் ஆகியோரின் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் முஸ்லிம்கள் பெரும்பான் மையாக இருக்கின்ற மாவட்டங்களில் தனித்தும் ஏனைய மாவட்டங்களில் சமகி ஜனபலவேகய கட்சி கூட்டணியுடன் இணைந்தும் போட்டியிடுகின்றன. ரனில் விக்கிரமசிங்காவுடன் இருந்த ஒரு தரப்பினர் அதே காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்ற அதே நேரம் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் யானை சின்னத்தில் ஐ.தே.கட்சி என்ற பெயரில் களம் இறங்குகின்றது. இந்த ஐ.தே.க. கடந்த 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுடன் மக்கள் மத்தியில் இருந்து முற்றாக செல்வாக்கிழந்து போன கட்சியாகும். ஆனால் ஜீவன் தொண்டமான், ராமேஸ்வரன் மற்றும் பழணி சக்திவேல் உட்பட இ.தொ.க. அங்கத்தவர்கள் மீண்டும் ஐ.தே.க. வுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் யானை சின்னத்தை தேர்ந்தெடுத்து போட்டியிடுகின்றனர்.

அதே நேரம் தேர்தலை குறிக்கோளாகக் கொண்டு பல புதிய கூட்டணிகளும் ஏற்பட்டுத்தப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்துள்ளன. நடிகள் ரஞ்சன் ராமநாக்கா ஐக்கிய ஜனநாயக குரல் என்ற பெயரில் கட்சியொன்றை அமைத்து அவரை பிரதானமாகக் கொண்டு போட்டியிடுகின்றது. ஜே.வி. பி. யின் முன்னாள் தலைவர் விஜேவீரவின் மகன் இரண்டாவது சந்ததி (செகன்ட் ஜெனரேசன்) என்ற பெயரிலும் சட்டத்தரணி நுவன் போபகே தலைமையிலான கட்சி ஜன அரகலய என்ற பெயரிலும் போட்டியிடுகின்றன. இவ்வாறாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய புலிகள் கட்சி உட்பட பல கட்சிகள் போட்டியிடுகின்றன.

# தேசிய மக்கள் சக்திக்கு சவால் விட எந்தக் கட்சியும் இல்லை

## - லால்காந்த -

(ரஷீத் எம். றியாழ்)

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடும் வகையில் எந்தக் கட்சியும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் கண்டி மாவட்ட பொதுத் தேர்தல் வேட்பாளருமான லால் காந்த தெரிவித்தார்.

கண்டி, நாவலப்பிட்டியில் நடந்த கூட்டமொன்றிலேயே லால்காந்த இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடும் வகையில் எந்தக் கட்சியும் இன்று இல்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது எட்டுத் து ண்டுகளாகப் பிளவுபட்டுள்ளது, ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இல்லாமல் போய்விட்டது.

பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அனைத்துப் மக்களும் திசைகாட்டி பக்கம் திரண்டு வருகின்றனர்.

நாவலப்பிட்டி தொகுதியில் ஜனாதிபதி தேர்தலில் திசைகாட்டி வெற்றிபெற நாவலப்பிட்டி பிரதேச மக்கள் நடவடிக்கை எடுத்தனர். என்றும் அவர் தெரிவித்தார்.






# வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுத்தல்

வாசிப்பு என்பது உன்னதமான அனுபவம். அது ஒரு பண்பாடு. அது ஒரு கலாசாரம். மனித விழுமியங்கள் மீதான அகன்ற பார்வைக்கான மூல ஊற்று. வாசிப்பின் மகிமையை உணர்ந்தவர்கள் மட்டுமே மொழியையும் புத்தகங்களையும் நூலகங்களையும் நேசிக்க முடியும். வாசிப்பு குறித்தும் நூல்கள் குறித்தும் உரையாட முடியும். வாசிப்பு மொழியையும் விருத்தி செய்யும் செயன்முறையாக உள்ளது.

வாசிப்பை மறுதலித்து வாழவோ அறிவு சார் பொருளாதார உலகில் தலை நிமிர்ந்து வாழவோ முடியாது.வெள்ளப்பிரளயம் போல பெருக்கெடுத்து வரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிகொள்ளவும் முடியாது.

கல்விப்புலத்திலும் ஆய்வுப்புலத்திலும் வாசிப்பின் வகிபாகமும் வளர்ச்சியும் தவிர்க்க முடியாத அம்சங்களாக உள்ளன. வாசிப்பின் மகிமை கற்றலின் மேன்மையை உணர்த்தும். வாசிப்பால் வாழ்க்கையில் உயரும் உன்னத நிலையை கல்வித்திட்டங்களும் கலைதிட்டமும் கல்வி முறைமையும் உயர்த்தி மேம்படுத்த வேண்டும். வாசிப்பின் வளர்ச்சி கல்வித்துறையின் வளர்ச்சியாக பரிணமிக்கும். வாசிப்பின் வளர்ச்சி ஆளுமை உருவாக்கத்தினதும் கல்விக்குறிக்கோளினதும் உயர்ந்த அடைவாக இருக்கும். அறிவு,திறன் மனப்பாங்கு நடத்தை மனக்கட்டமைப்பு என்ற ரீதியில் நட்பிரஜைகளை உருவாக்கும் அதி உன்னத செயற்பாட்டுக்கு வாசிப்பு வித்திடும். வழியமைக்கும்.

தனி மனித எழுச்சி, சமூக எழுச்சி, ஆன்மீக சுபீட்சம், நாட்டின் விருத்தி அனைத்திற்கும் வாசிப்பின் வகிபங்கு தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது."மிகச்சிறந்த புத்தகம் மிகச்சிறந்த மனிதனுக்கு நிகர்" என்பது ஆங்கில நாட்டு பிரபல கவிஞன் மில்டன் என்பவரின் கூற்றாகும். நல்ல புத்தகங்கள் நல்ல எண்ணங்களையும் சிந்தனைகளையும் தீர்மானங்களையும் கொண்டுவரும். புத்தகத்திடம் பௌதிக ரீதியாகவோ உயிரியல் ரீதியாகவோ எதுவும் இருக்காது. ஆனால் அதனிடம் வினைப்பாடு மிக்க மூளை அமைந்திருக்கும்.

வாசிப்பும் தேடலும் சிந்தனையும் எழுத்தும் இவை அனைத்தையும் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களுமே மனிதர்களை உருவாக்கி உலகிற்கு பயன் தர விடுகின்றன. இவை வரமாக பெற்ற துடிப்பும் துணிவும் உள்ள வளர்ந்துவரும் இரு பெரும் இளம் ஆளுமைகள்

மனிதர்களை வாசித்தல் என்பது வேறு. மனித ஆளுமைகளை வாசித்தல் என்பது வேறு. சிந்தனைகளையும் அதன் ஸ்தாபகர்களையும் அவர்களது ஆளுமைகளுடன் அந்தக்காலத்துக்கு ஏற்ப விளங்கி வாழும் காலத்துக்கும் ஏற்றாற்போல வடிவமைத்து விளங்குவதும் விளக்குவதும் ஆக்கபூர்வமாக விமர்சிப்பதும் வித்தியாசமான ஒரு திறமையாகவே கருதப்பட வேண்டும்.

எழுத்தாளர்களாகட்டும் பேச்சாளர்களாகட்டும் அது எந்த வேறுபட்ட இஸ்லாமிய அதுவல்லாத துறைகளாகட்டும். பரம்பரை இடைவெளி நிகழ்ந்துதான் வருகிறது. இளையோரை அங்கீகரிக்காத மூத்தோரும் மூத்தோரை விமர்சிக்கும் இளையோரும் இருக்கவே செய்யும். ஆனால் இளமையை கடக்காமல் யாரும் மூத்தோர் எனும் நிலையை அடையவில்லை.மூத்தோர் எனும் பருவத்தை அடைந்து தான் முதிர்ச்சி என்பது வரவேண்டும் என்பதில்லை. விதிவிலக்காக இது அமையலாம்.

பல மூத்த எழுத்தாளர்கள் திறமைகள் இருந்தும் வேலையும் சோலியும் காரணமாக எழுதாத பேசாத விடயங்களை விவகாரங்களை தொடராக வாசிக்க வேண்டும்.

தொடரும்.




நாச்சியாதீவு
பர்வீன்




# இதயம் இனித்த இலக்கியப் பயணம்

–ஷாறா–

பயணங்கள் சுகமாவதும் சுமையாவதும் யாருடன் இணைந்து பயணிக்கிறோம் என்பதிலும் இருக்கிறது. இலக்கியவாதிகளுடன் பயணிப்பது எப்படியிருக்கும் என்பதை அனுபவித்துப் பார்க்க எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

கவிஞர் புத்தளம் மரிக்கார் அவர்களது இரு கவிதை நூல்களின் வெளியீடு கடந்த ஐந்தாம் திகதி மாலை 6.15க்கு புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. CREATE இலக்கிய வட்டத்துடன் இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, இஸ்லாஹிய்யா பெண்கள் அறபுக்கல்லூரி போன்ற எட்டு அமைப்புகள் இணைந்து இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தன.

கொழும்பிலிருந்து கௌரவ அதிதிகளாக, விஷேட அதிதிகளாக அழைக்கப்பட்டோரை அழைத்துச் செல்ல வாகனமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரபல இலக்கியவாதிகளான பன்முக ஆளுமை அஷ்ரப் ஷிஹாப்தீன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், அவரது துணைவியார், சந்தக்கவி கிண்ணியா அமீர் அலி, கவிஞர் அப்துல் லதீப், இளநெஞ்சன் முர்ஷிதீன், இலங்கை நெய்னார் சங்கத் தலைவர் இம்ரான் நெய்னார், கவிமணி நஜ்முல் /ஹுஸைன், அவரது துணைவியார் ரஷீத் நூருல் ஐன் ஆகியோருடன் நானும் துணைவரும் புறப்பட்டோம். ஊஹர் தொழுகைக்குப் பின் புறப்பட்ட வாகனம் 5.20க்குப் புத்தளத்தை அடைந்தது.

அந்தச் சில மணித்தியாலங்களுக்கும் உயிர் கொடுத்தார்கள் அந்த இலக்கியவாதிகள். ஓயாத கதை. கடைசி ஆசனங்களில் அமர்ந்திருந்த நூருல் ஐன் தாத்தாவுடனும் என்னுடனும் சுவையான பல கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார் அமீரலி. முன்பக்கம் அனுபவப் பகிர்வும் கருத்துக் களமும் என ஏதேதோ நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் ஜின்னா பாரம்பரியம் நடத்துகிறாரோ என்ற சந்தேகமும் வந்தது. ஒரு காதை முன் பகுதியிலும் மற்றக் காதை பின் பகுதியிலும் வைக்க முயன்று நான் தோற்றுப் போனேன்.

குரல் மாற்றி மாற்றி சிறுகதை வாசித்தும் பிஞ்சு மனம் நடத்தியும் பள்ளிக் காலத்தில் எங்கள் உள்ளங்களை வென்றவர் எம்.எஸ். எம். ஜின்னா. அதே காலத்தில் பலமுறை வாசித்தும் மனனமிட்டும் மேடையேற்றியும் மகிழ்ந்த "ஓ அல் குர்ஆனே!" என்ற அற்புதமான நெடிய கவிதையைத் தனது இளம் வயதில் தந்து எங்களை உருக வைத்தவர் அஷ்ரப் ஷிஹாப்தீன் அவர்கள். அந்தக் காலத்திலேயே இப்படியும் தமிழா? என்று எங்களை வியக்க வைத்தவர் கிண்ணியா அமீரலி. இப்படியான பலருடன் இணைந்து போன பயணத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்த எல்லோரதும் தாகம் தீர்க்க சுவையான ப்ளேன் டீயும் பிஸ்கட்டும் கொண்டு வந்திருந்தார் நூருல்ஐன் தாத்தா. அது அந்த நேரத்துக்கு அமுதமாயிருந்தது. அத்தோடு சுவையான மாலுபாணும் வாங்கி உண்டு இடையில் வந்த பசியைப் போக்கிக் கொண்டோம்.

இஸ்லாஹியாவைச் சென்றடைந்ததுமே அன்பாக வரவேற்றுத் தேனீர் விருந்தளித்தார்கள். அன்புச் சகோதரர் மரிக்காரும் அவரது துணைவியார் சகோதரி பெரோஸாவும் எல்லோரையும் மிக அன்பாக உபசரித்தார்கள். ஏற்பாட்டுக் குழுவினரும் எல்லாவற்றையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

சுமார் ஏழு மணிக்குப் போல் விழா இனிமையான கிராஅத்துடன் ஆரம்பமானது. பிரதம அதிதியாக முஸ்லிம் கலாசாரத் தணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஷெய்க் அலா அஹ்மத் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். மூத்த இலக்கியவாதியான ஜவாத் மரிக்கார் அவர்களையும் முதன்முறையாக நேரில் சந்திக்கக் கிடைத்தது. அவரோடு ஷெய்க் எச். எம் மின்ஹாஜ் அவர்களும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஞு.யு. ஸன்ஹிர் அவர்களும் மேடையில் எம்மோடு அமர்ந்திருந்தனர் முகநூலில் அடிக்கடி காணும் ஸன்ஹிர் சேரையும் அன்றைக்குத் தான் நேரில் கண்டேன்.

வரவேற்புரையை சகோதரர் ஹிதாயதுல்லாஹ் அஜ்மல் அவர்களும் தலைமையுரையை அஷ்ரப் ஷிஹாப்தீன் அவர்களும் வாழ்த்துரையை நஜ்முல் /ஹுசைன் அவர்களும் நிகழ்த்தினார்கள். "மைத்துளிகள்மரணிப்பதில்லை" நூலுக்கான நயவுரையை சன்ஹிர் சேரும் கவி வாழ்த்தை சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் அவர்களும் வழங்கினார்கள். முஹம்மத் ஷாமில் என்ற சகோதரர் குர்ஆனுடனான வாழ்வு பற்றிய அருமையான பாடலொன்றைப் பாடினார்.

"ரகசியங்கள்" நூலுக்கான நயவுரையை தமிழ் தென்றல் அலி அக்பர் அவர்களும் கவி வாழ்த்தை இளநெஞ்சன் முர்ஷிதீன் அவர்களும் வழங்கினார்கள். எந்த உரை, கவிதை சிறந்தது என்று சொல்லமுடியாத அளவுக்கு எல்லாமே சிறப்பாக இருந்தன. அலுக்காமல் சலிக்காமல் கேட்க முடிந்தது. சுவாரசியமாகவும் இருந்தது.

அஷ்ரப் ஷிஹாப்தீன், அலிஅக்பர், ரஷீத் எம் இம்தியாஸ், நஜ்முல் ஹுஸைன் ஆகியோரின் உரையில் ஒரு விடயம் பொதுவாக இருந்தது. அது கவிஞர் மரிக்கார் ஓராண்டுக்கு முன் அவர்களுக்கு அறிமுகமான விதம் பற்றியது. கொழும்பிலிருந்து போனவர்களுள் என்னைத் தவிர மற்ற அனைவரும் அவரை அறிந்து கொண்டது ஓராண்டுக்கு முன் தாருல் ஈமானில் நடந்த ஹிஜ்ரத் கவியரங்கு மூலம்தான். அந்தக் கவிதையும் அதை அவர் முன் வைத்த விதமும் அந்த இலக்கியவாதிகள் அனைவரையும் ஈர்த்திருக்கிறது. அந்தக் கவியரங்கு முடிந்ததும் சபையிலிருந்த அலி அக்பர் அவர்கள் சகோதரர் மரிக்காரோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டேன். தங்களுக்கு ஒரு மாணிக்கம் கிடைத்து விட்டதாக இந்த இலக்கியவாதிகள் மகிழ்ந்திருப்பார்கள் என அப்போது நினைத்துக் கொண்டேன். அது முற்றிலும் உண்மை என்பதை அவர்களது உரைகள் கூறின.

நாங்கள் இருவரும் நீண்ட காலமாகத் தெரிந்தவர்களாகவும் எழுத்தைப் பரஸ்பரம் அறிந்தவர்களாகவும் இருந்தோம். அவரது துணைவியார் பெரோஸாவுடனும் நீண்ட காலப் பழக்கம். எல்லாமிருந்தாலும் அவரை நேரில் சந்தித்துப் பேசிக் கொண்டது அதே கவியரங்கில் தான். அவர் நீண்ட காலம் பஹ்ரைனிலிருந்ததும் ஒரு காரணம்.

வழமையாக நூல் வெளியீட்டு விழாக்களில் நூலாசிரியரை ஆகா!ஓகோ! எனப் புகழும் போது கேட்டுக் கொண்டிருக்கக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். அது அளவுக்கு மிஞ்சும் போது சலிக்கும். ஆனால் அன்புத் தம்பி மரிக்காரை ஒவ்வொருவரும் புகழும் போது மட்டும் மனதுக்குள் பனி மழை பொழிந்தது. அதற்குத் தகுதியானவராக அவர் இருந்தார். அதே வேளை அந்தப் பாராட்டுகளில் சோடனையோ சோபனையோ அணுவளவும் இருக்கவில்லை. (சோபனைக்கு தமிழ் அகராதியில் பொருள் தேட வேண்டாம்) எல்லோரும் உள்ளத்தால் பேசினார்கள்.

கவிஞர் மரிக்கார் அவர்களது ஏற்புரை மிகச் சிறப்பாக இருந்தது. அந்த உள்ளீடுகள் இல்லையென்றால் இந்த வெளியீடுகள் இல்லை என்று அவரது எழுத்துக்குப் பின்னாலிருந்தவர்களை அன்போடு நினைவு கூர்ந்தார். அடுத்ததாக ஷெய்க் மின்ஹாஜ் அவர்களது சிறப்புரை மிகப் பிரமாதமாக இருந்தது. இலக்கியத்தோடு இணைந்ததாக இஸ்லாத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை அழகாக எடுத்துச் சொன்னார். அவரது மொழி நடையும் உள்ளடக்கமும் எல்லோரது பாராட்டையும் பெற்றது.

அந்த விழாவை ஊடகவியலாளர் எம். எச் முஹம்மத் அவர்களும் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் பாத்திமா ரிஸ்கியா அவர்களும் அழகாகத் தொகுத்தளித்தார்கள். சிறப்பானதொரு விழாவில் கலந்து கொண்ட மனத்திருப்தி கிடைத்தது.

விழா நிறைவு பெற்றதும் சபையில் முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு சகோதரர் மேடைக்கு வந்தார். எனக்கு அறிமுகமில்லாதவர். மேர்ஸி லங்கா நிறுவனத்தைச் சேர்ந்த ஷெய்க் முனாஸ் அவர்கள். தனது மனைவி என்னைப் பற்றி நிறையச் சொல்லியிருப்பதாகச் சென்னார் என் அன்பு மாணவி ரியாஸா பர்ஸானா ரபீக்கின் துணைவர் அவர். "ஏன்ட வைஃப் ஒங்கட பெயர திக்ரு செய்றா" என்றதும் நான் நெகிழ்ந்தேன். இதே கதையைப் பல கணவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பலமுறை வந்து பேசிப்பேசி அடுத்தநாள் அவர்களது இல்லத்தில் பகலுணவுக்கு என்னையும் கணவரையும் இணங்க வைத்து விட்டார். அதன் பின் நுச. மும்தாஸா நுச.நைஜீல் தம்பதிகளின் மூன்று பிஞ்சுகள் வந்து ஒட்டிக் கொண்டன. என் வாசகர்களாம். என்னோடு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

கவிஞர் தம்பதிகளும் விழா ஏற்பாட்டாளர்களும் எம்மை இரவுணவுக்காக அழைத்துச் சென்றனர். அப்போது இரவு பத்து மணியிருக்கலாம். புத்தளத்தின் வழமையான உஷ்ணத்தைக் காற்று விழுங்கியிருந்தது. களப்பு நீருக்கு மேலால் மிதந்து கொண்டிருந்த அந்த உணவகம் மெதுவாக எம்மைத் தாலாட்டிக் கொண்டிருந்தது. சுவையான உணவும் சுகமான சூழலும் அன்பான உபசரிப்பும் மனதுக்கு இதமாக இருந்தது.



மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது. கொழும்பிலிருந்து எம்மோடு வந்த அனைவரையும் வழியனுப்பி வைத்து விட்டு நானும் கணவரும் தங்குவதற்காக நானாவின் வீட்டுக்குப் போனோம்.

அதிகாலை நான்கு மணியாகுமுன்பே விழிப்பு வந்து விட்டது. என் கண்ணுக்குள் அன்புத் தம்பி மரிக்காரும் அவரது துணைவியார் பெரோஸாவும் வந்தார்கள். என் வாசகர்கள் என்று சொன்ன அந்த மூன்று பிஞ்சுகளும் வந்தார்கள். ஷெய்க் முனாஸும் அவரது துணைவி பர்ஸானாவும் வந்தார்கள். இப்படியெல்லாம் மனிதர்கள் ஊடாக உன் கருணையை நீ பொழிவதற்கு உனக்கு நான் என்னதான் செய்திருக்கிறேன் இறைவா! என மனம் புலம்பியது.

பகல் ஷெய்க் முனாஸ் அவர்கள் காரில் வந்து அழைத்துப் போனார். அந்த அன்பு மாணவியை 32 வருடங்களுக்குப் பின் சந்தித்தேன். அதே நிறுவனத்தில் பணியாற்றும் இன்னொரு ஷெய்கின் மனைவியான என் மாணவி இஸ்மினாவும் அங்கு வந்திருந்தார். பேசி மகிழ்ந்திருந்தோம். சுவையான உணவுண்டோம். பின் அன்பளிப்பும் தந்து காரில் சிலாபம் வரை இருவரும் அழைத்து வந்தார்கள். இவ்வளவு சிரமப்படுகிறார்களே என மனதுக்கு வருத்தமாக இருந்தது. இரவு வீடு வந்த சேர்ந்த பின் தான் ஒன்று நினைவு வந்தது. ஆமாம்! அன்றைக்கு ஆசிரியர் தினம்.

கவிஞர் மரிக்கார், அவரது துணைவியார் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினர் அனைவருக்கும் கொழும்பிலிருந்து சென்ற அனைவர் சார்பிலும் மனமார்ந்த நன்றிகள்.



## ஆசிரியம் ஒரு ஆச்சரியம்

ஆசிரியம்
வியத்தகு ஆச்சரியம்

கருணை எனும்
நிறம்கொண்டு
தீட்டப்படும் ஓவியமது

கற்றல்,கற்பித்தல்
பெற்ற அறிவை
பகிர்ந்து கொள்ளல்
என்ற மகத்தான பணியாதலால்
மற்றவற்றைவிடவும்
ஆசிரியப்பணி
வியத்தகு ஆச்சரியம்

ஒரு நல்லாசான்
மாணவனின் மனதில்
சிம்மாசனம் போட்டு
காலமெல்லாம் வாழ்வார்

அன்பால் தலைதடவி
ஆதரவாய் அரவணைத்து
நற்பண்பால் மாணவரின்
இதயத்தில் இடம்பிடிப்பர்
நல்லாசான்கள்....

பெற்றதை கொடுக்கும்
பெருமனது ஆசிரியத்தின்
அற்புதப்பண்பு..

நல்லது கெட்டது
நயம்பட கூறி
நல்லணகான நல்வழிகாட்டும்
அறநிலைதான் ஆசிரியம்

வெறும்கல்லென வரும்
பிஞ்சுகளுக்கு கல்வியை
கல்லென திசைகாட்டி
வல்லவன் இவனென
உலகம் போற்றவைக்கும்
ஆசிரியம் ஒரு ஆச்சரியம்

உயர்பதவி வகித்தாலும்
உலகத்தை ஆண்டாலும்
ஆசானைக் கடந்துதான்
இவ்வடைவு சாத்தியமாகும்..

பட்டம்போல் உயர
பதவிநிலை உயர்ந்தாலும்
படிப்பித்த ஆசானை
பக்கத்தில் கண்டாலே
பதட்டம் தொற்றிக்கொண்டு
படபடக்கும் இதயம்..

உக்கார கதிரையை
உடனே இழுத்துவைக்கும்
உள்ளன்பில் மரியாதை
உயிர்த்தெழும்
சொல்லொணா களிப்பில்
விழிபிதுங்கி-கல்லூரி
நாள்தேடி கால்கள் ஓடும்

நம்நேசத்திற்குறிய
ஆசான்கள் பலபேர்கள்
அடிமனதில் இருப்பார்கள்
விடிவெள்ளியாக இருந்தெமது
விடிவுக்காக பணிசெய்தோர்

நல்லாசான்கள் வாழ்வு
நலம்பெற்று ஓங்கணும்
நாயன் அருளாலே அவர்
துன்பங்கள் நீங்கணும்...

–அபூ செய்னப்–

## மனநலமும் ஆலோசனையும் 51

# செழிப்பான தேசம்

ஒவ்வொரு தனிமனிதனும் செழிப்பான வாழ்க்கையை அனுபவிக்க ஆசைப்படுகிறான். தனிமனிதனின் செழிப்பு ஒரு செழிப்பான தேசத்தின் முதுகெலும்பாகும்.

எந்த ஒரு நாடு அங்கு வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் செழிப்பான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி பயணிக்கவில்லையோ அந்த நாடு செழிப்பு நிறைந்த நாடாக மாறுவதற்கான வாய்ப்பு சற்றேனும் கிடைக்கப் போவதில்லை.

உண்மையான செழிப்பு தனிமனிதனில் இருந்து தொடங்குகிறது. அது கணவன் மனைவி, பிள்ளைகள், குடும்பம், சமூகம், நாடு என்று விரிந்து செல்கிறது. அனைத்து மக்களும் தங்களின் தனித்துவமான திறன்களை அறிந்து, வாழ்க்கையை மதித்து வாழ்வதை உணர்ந்து அவர்கள் வாழும் சமூகத்தினதும் நாட்டினதும் விருத்தியை வலுப்படுத்துவதில் தங்கள் பங்கை ஆற்றுவதன் மூலமும் நாடு செழித்தோங்க ஆரம்பிக்கிறது.

அதற்கான அடிப்படை தனிமனிதனை செழிப்புள்ளவனாக ஆக்குவதற்கான சிறந்த வேலைத்திட்டங்கள் அவசியமாகும்.

எனது நாட்டில் ஒரு அழகான எதிர்காலம் எனக்கு இருக்கிறது. என்ற நம்பிக்கை ஒவ்வொரு தனிமனின் உள்ளத்தில் உதயமாகினால் மட்டுமே நாடு செழிப்பதற்கான கதவுகள் திறந்து கொள்ள ஆரம்பிக்கும்.

ஒவ்வொரு தனிநபரின் அடிப்படை சுதந்திரங்களை உறுதிப்படுத்தி, பாதுகாப்பும் வலுவான சமூக இணைப்பும் தரமான கல்வியும் எதிர்காலம் மீதான உறுதியான நம்பிக்கையும் எப்போது உருவாக்கப்படுமோ அப்போது செழிப்பு தளிர் விடத் தொடங்குகிறது.

தனிமனித மேன்மையை உணரச் செய்தல்,

சமூக ஒற்றுமையை உருவாக்குதல்,

சமூக நீதியை கட்டமைத்தல்,

ஒவ்வொருக்கும் சமத்துவத்தில் ஆசையை ஏற்படுத்தல், பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மூலம்

சமூக ஒற்றுமையை உருவாக்குதல்.

பாகுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை உருவாக்குதல் போன்ற உளச்சமூக திட்டங்கள் முறையாக அமுல் படுத்தப்படும் போது தனிமனிதனுக்குள் செழிப்பு மொட்டு விடத் தொடங்குகிறது

ஒவ்வொரு கலாச்சாரத்தின் அடையாளத்தை ஊக்குவித்தல்,

தேசத்தின் தனித்துவமான வரலாற்றை மதித்தல்,

மரபுகள் மற்றும் மதிப்புகளை கௌரவித்தல்,

சமூக உறவுகளை மேம்படுத்துதல். கலைகளை ஆதரித்தல்,

வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்,

தேசிய விடுமுறைகள் மற்றும் பண்டிகைகளை

மதித்தல்,

நாட்டில் மதங்கள் தாண்டிய மனித நேயம் இருப்பதை உறுதிப்படுத்தல்

போன்ற உள்ளடக்கங்கள் ஊக்குவிக்கப்படும் போது செழிப்பு மலரத் தொடங்குகிறது.

ஒரு நாடு அதன் குடிமக்களுக்கு தரமான கல்வி, தரமான பண்பாடு தரமான சுகாதாரம் மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு பங்களிக்கும் அத்தியவசிய சேவைகளுக்கான அணுகலை தடையின்றி வழங்க ஏற்பாடுகளை செய்யும் போது நாட்டில் செழிப்பு மனம் வீசத் தொடங்குகிறது.


நான் வாழும் நாடு எனக்கானது, அதை செழிக்க வைக்கும் பொறுப்பும் எனக்கானது, என்ற சூத்திரத்தை மனதில் கொண்டவனாக ஒவ்வொரு தனிமனிதனும் அவன் பயணிக்கும் பாதையை வடிவமைத்துக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் எவ்வளவு வினைத்திறனாக அமைக்கப்படுமோ அவ்வளவு செழிப்புடன் புதிய தேசத்தை நோக்கி அவன் பாதங்களை நகர்த்தத் தொடங்குவான்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்




அன்புள்ள மாணவர்களுக்கு,

இத்தினத்தில் நான் வழமையாக என் ஆசிரியர்களுக்குத்

தான் நன்றி செலுத்துவேன். உண்மையில் என் "ஆசிரியம்" ஆசிர்வாதமுள்ளதாக ஆரம்பித்து வைத்த உங்களை இந்நாளில் நன்றியுணர்வோடு நினைவு கூர்வதில் மிக அகமகிழ்கின்றேன்.

1996 இல் தொண்டு சேவகனாகவும்

# என் மாணவர்களுடன் சில நிமிடங்கள்...

1997 இல் ஆசிரியச் சேவகனாகவும் உங்களோடு ஒட்டிக்கொண்டபோது ஒவ்வாமை இருக்கவில்லை. ஓரவஞ்சனை இருக்கவில்லை.என் கருத்துக்களும் கற்பித்தலும் உங்களால் அங்கீகரிக்கப்பட்டபோது, நான் "கற்றுக்கொள்ளலுக்குள்" காலடி எடுத்து வைத்தேன். ஆம் பல கோணங்களில் பல விடயங்களை நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தீர்கள்.உங்களை அறியாமலே.

10,11,12,13 தரங்களுக்கு தாய்மொழி கற்பிக்கும் வாய்ப்பு வரமா,சாபமா என அடிக்கடி எண்ணிப்பார்க்கின்றேன். 300,400 சொற்களுக்குள் "கட்டுரை" என்ற பெயரில் தலைக்கு ஒன்றாக கருத்துக்களஞ்சியமாக முன்வைக்கின்ற உங்கள் வார்த்தைகள் எனக்கு வரப்பிரசாதங்களாகின்றன. அவற்றில் விஞ்ஞானத்தின் விருந்தும் சுகாதாரத்தின் சுகந்தமும் தொழிநுட்பத்தின் புதுமையும் ஆரோக்கியத்தின் ஆணிவேரும் மனித விழுமியங்களின் வித்தியாசமும் சிறுவர் உரிமையின் உன்னதமும் பெண்மையின் பெருமைகளும்...... வெளிப்படும் போது மொழிப்பாத்திரத்தில் பல பானங்களைப் பருகிய ஒரு பக்தனாக உங்களிடம் என்னை இறுக்கி வீட்டீர்கள். உண்மையில் நீங்கள் என் ஆசியர்கள் என்பதை இன்று உங்கள் முன்னிலையில் பகிரங்கமாக பிரகடனப்படுத்துகின்றேன். மிக மிக நன்றியுடன்.

உங்களிடமுள்ள கருத்துக்களை அள்ளி மொள்ளுவதற்காகவேநான் சில நாட்களை ஒதுக்கிக்கொள்வேன். அது நான் சோர்வடைந்த ஒரு நாள் அல்லது நீங்கள் சோர்வடைந்திருந்த ஒரு நாளாகத்தான் பெரும்பாலும் இருக்கும். அப்போது நீங்கள் மிக மிக சுதந்திரமாக உரையாடுவீர்கள். உங்களிடமுள்ள சமூகப்பற்றையும் எதிர்கால இலட்சியங்களையும் கனவுகளையும் கக்கி விடுவீர்கள்.அவற்றில் நானும் கட்டுண்டு உங்களையும் நெறிப்படுத்தி பெற்றுக்கொண்ட அனுபவப்பாடங்கள் அளப்பரியவை. நீங்கள் கூலி கோராமல் எனக்குக் கற்றுக்கொடுத்த அந்த அரிய நிமிடங்களை நான் மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன். என் மாணவர்களுக்காக மிக மிக நன்றியுடன்.

தாய்மொழிப்பாடப்பட்டறைக்குள் நான் பட்டை தீட்ட முனைந்த போது கைநழுவிச் சென்ற அமானிதங்களை எண்ணி நான் தற்போதும் வருந்துகின்றேன்.

ஆடிக் கற்பிக்க வேண்டியவரை பாடிக்கொண்டும் பாடிக்கற்பிக்க வேண்டியவரை ஆடிக் கொண்டும் பாடம் நடத்தியதன் விளைவோ? என கைசேதிக்கின்றேன்.

இந்த சந்தர்ப்பங்களில் என்னைத் திருந்த வைத்து வருந்தவைத்த உங்களை நான் மனம் நிறைந்த ஆசான்களாக ஆமோதிக்கின்றேன்.

மன்னித்து விடுங்கள் என் மாணவர்களே.

"இவர்களுக்கு ஓரிரு வார்த்தைகளைக் கற்பிக்கும் பாக்கியத்தை இறைவன் தந்தானே" என நான் பலரைப் பார்த்து எண்ணி வியந்து பூரிப்படைகின்றேன்.

ஆசிரியர்களாக, அதிபர்களாக, சட்டத்தரணிகளாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஊடகத்துறை சார்ந்தவர்களாக, பிரதேச செயலகப் பணியாளர்களாக, கவிஞர்களாக, சமூக நிறுவனங்களின் (SDC, OGA, OBA) தலைவர்/உறுப்பினர்களாக/விளையாட்டு வீரர்களாக/பயிற்றுவிப்பாளர்களாக........ என பல துறைசார்ந்தவர்களுக்கு சிறு துளியாகவேனும் போதிக்க கிடைத்த பாக்கியத்தை எண்ணி வியக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்

என் அருமை மாணவர்களே உங்கள் வகுப்பறைகளில் நான் தவறிட்ட சந்தர்ப்பங்களை மன்னித்து விடுங்கள். நீங்கள் எனக்களித்த அனுபவங்கள் வழங்கிய கருத்தாடல்கள் என்றும் என் உள்ளத்தில் நீங்கா நினைவுகளே. உங்களிடம் கற்றுக்கொண்ட / பெற்றுக்கொண்ட பாடங்களின் தடயங்களிளேயே வருடா வருடம் என் கற்பித்தலை புதுப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றேன்

என்றும் நலமுடன் வாழுங்கள். வாழ்த்துக்கள், பிரார்த்தனைகளுடன் விடைபெறுகின்றேன்.

என் அருமை ஆசான்களே,

என்றும் அன்புடன்,

**M.C. யாகூதுன்னிஸா (Tr)**

# புதிதாய் வாழ்வோம்

*திருமணமாகி இரு குழந்தைகள் ஆனபின் ஒரு முப்பத்தைந்து வயதுக்கு பிறகு எல்லாமே முடிந்தாகி விட்டதென நினைக்கின்றனர் சிலர்.*

*உடலும் மனமும் இனி எதற்கும் முன்போல இயங்காது என நினைத்து விடுகின்றனர்.*

*அதன் பின் தான் "எல்லாமும்" தேவைப்படுகிறது என்பதை மறந்துவிடுகின்றனர்.*

*இளமை துடிப்புடன் மட்டும் செயல்பட்ட நம் உடல் அனுபவத்துடன் சேர்ந்து அப்போது தான் ஆட்டத்தை ஆரம்பிக்க உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.*

*வாழ்க்கையை அழகாக பார்த்த நம் மனம் அப்போது தான் புரிதலோடு பார்க்க தொடங்கும்.*

*பார்க்கும் அனைத்திலும் ஒரு உணர்வோடு உயிர்ப்போடு இயங்க வைக்கும்.*

*புதிதாகப் பிறந்தது போல மனதை உற்சாகமூட்டி*



*அழகழாக புதிய உடைகளை அணிந்து*

*புதிது புதிதாக எழுத்துக்களை வாசித்து*

*புதிய பயணங்களை புத்துணர்வோடு மேற்கொண்டு*

*இரண்டாவது அத்தியாயத்தை குடும்பத்தோடு களித்திருங்கள்.*

*காத்தால சீக்கிரம் எழுந்து*
*காலை டிபன் செஞ்சு*
*அது கூட*
*மதியமும் சேர்த்து லஞ்ச் செஞ்சு*
*குழந்தைகளை குளிப்பாட்டி,*
*எட்டு மணிக்கெல்லாம்*
*அவர்களை ஸ்கூல் வேனில் ஏத்தி*
*சமைத்து பாத்திரங்கள் கழுவி,*
*ஊறவைத்த துணிகளை*
*துவைத்து,*
*வீடு மொத்தமாய் பெருக்கி,*
*ஒருத்திக்கு எதுக்கு சமையல்னு*
*இருக்கிறதை அள்ளி போட்டு*
*சாப்பிட்டு,*
*காய்ந்த துணிகளை*
*கொண்டுவந்து*
*வராத பாடத்தை வரவழைக்க*
*வாய்வலிக்க சொல்லித்தந்து*
*ஒரு இயந்திரம் போல*
*வாழும் வாழ்க்கையை*
*வாழ்ந்த வாழ்க்கையை*
*நீங்களும் வாழாதீர்கள்..*
*ஒரே வாழ்க்கை*
*அனுபவித்து வாழுங்கள்....!!*




அரபாத் பஹுர்தீன்

# நான்கிலும் தோற்று நடையைக் கட்டியது இலங்கை மகளிர் அணி

மகளிர் உலகக்கிண்ண ரி20 தொடரின் முதல் சுற்றின் இலங்கை எதிர் கொண்ட நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதி லீக் போட்டியிலும் 8 விக்கெட்டுக்களால் தோற்று நடையைக் கட்டியது இலங்கை மகளிர் அணி.

9ஆவது மகளிர் ரி20 உலகக் கிண்ண தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் இடம்பெற்று வருகின்றது. இதல் குழு ஏ இல் இடம்பெற்றுள்ள இலங்கை அணி தான் எதிர்கொண்ட பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் இந்திய மகளிர் அணிகளிடம் தோற்று உலகக்கிண்ண வாய்ப்பை இழந்திருந்தது. இந்நிலையில் மிகுதியாக இருந்த நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதி லீக் போட்டியில் ஆறுதல் வெற்றியாவது பெறலாம் என்ற முனைப்பில் நேற்று முன்தினம் (12) சார்ஜா மைதானத்தில் களம் கண்டது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதற்கமைய அணியின் தலைவியான சமரி அத்தபத்து அதிகபட்சமாக 35 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க, ஏனைய துடுப்பாட வீராங்கனைகள் பொறுப்பின்றி துடுப்பாடி விரைவாக பெவிலியன் திரும்ப இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விளையாட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் கேர் மற்றும் கெஸ்பரக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் மிக இலகுவான 116 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த நியூசிலாந்து அணிக்கு முன்வரிசை வீரர்களான பிலிம்மர் அரைச்சதம் கடந்து 53 ஓட்டங்களையும், அமெலியா கெர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் விளாசிக் கொடுக்க நியூஸிலாந்து மகளிர் அணி 17.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களை பெற்று 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த தோல்வியுடன் தொடராக 4ஆவது தோல்வியை சந்தித்த இலங்கை மகளிர் அணி 9ஆவது ரி20 உலகக்கிண்ண தொடரில் இருந்து நடையைக் கட்டியமை குறிப்பிடத்தக்கது.

# பல சாதனைகளுடன் வங்கதேசத்துக்கு வெள்ளையடித்தது இந்தியா




சுற்றுலா பங்களாதேஷ் அணிக்கு எதிரான 3ஆவதும், இறுதியுமான ரி20 போட்டியில் துடுப்பாட்ட வீரர்களின் ருத்திர தாண்டவத்தின் உதவியுடன் சாதனை ஓட்ட இலக்கினை குவித்த இந்திய அணி 113 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் 3ஆவதும், இறுதியுமான போட்டி 12ஆம் ஹைதராபாத் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் தாம் துடுப்பெடுத்தாடப் போவதாக அறிவித்தது. அதற்கமைய களம் புகுந்த இந்திய அணியின் ஆரம்ப வீரரான சஞ்சய் சம்சுன் அதிரடியை ஆரம்பிக்க மற்றைய வீரரான அபிஷேக் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து சம்சுனுடன் இணைந்த சூரியக்குமார் யாதவ் தன் மிரட்டல் அடியை ஆரம்பிக்க இந்திய அணியின் ஓட்ட வேகம் மின்னல் வேகத்தில் உயர்ந்தது.

இவ்விருவரில் சம்சுன் 40 பந்துகளில் சதம் அடித்து மிரட்ட யாதவ் அரைச்சதம் கடக்க இந்த ஜோடி தமக்கிடையில் 172 ஓட்டங்களை பகிர்ந்திருக்க சஞ்சய் சம்சுன் 111 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் அதிரடியில் மிரட்டிய சூரியக்குமார் யாதவ் 75 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த ஹர்திக் பாண்டியா மற்றும் ரியான் பராக் ஆகியோர் தலா 47 மற்றும் 34 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 297 ஓட்டங்களை பெற்றது. இந்த ஓட்டமானது டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஒரு அணி சர்வதேச ரி20 போட்டிகளில் பெற்றுக் கொண்ட அதிகமான ஓட்டங்களாக சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் எட்டவே முடியாத 297 என்ற மிக இமாலய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய பங்களாதேஷ் அணிக்கு தவ்ஹீத் ஹறிடோய் மாத்திரம் அரைச்சதம் கடந்து ஆட்டமிழக் காமல் 63 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க, லிடன் தாஸ் 42 ஓட்டங்களை தன் பங்கிற்கு அடித்துக் கொடுக்க பங்களாதேஷ் அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை மட்டுமே பெற்று 133 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் ரவி பிஸ்னோய் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியுடன் இந்திய அணி தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.

இப் போட்டியின் நாயகனாக சஞ்சய் சம்சுன் தெரிவாக, இத் தொடரின் நாயகனாக 3 போட்டிகளிலும் சகலதுறையில் அசத்திய ஹர்திக் பாண்டியா தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலயம் சாதனை

புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலய 16 வயதுக்குட்பட்ட காற்பந்தாட்ட அணி அகில இலங்கை ரீதியான காற்பந்தாட்ட போட்டியில் செம்பியனாகி வரலாற்று சாதனை படைத்தது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டி 14ம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் 16 வயதிற்குட்பட்டவர் களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் வியாவிழன் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இப்பலப்பரீட்சையில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் அணியினர் 02 : 01 கோலினால் வெற்றி பெற்று செம்பியனாது.

இந்த வெற்றிக்கு வழி அமைத்த வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு இவ் வெற்றியைப் பெற உறுதுணையாய் இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக பாடசாலையின் அதிபர் திரு. ஏ.ஜே.எம். இல்ஹாம் அவர்கள் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றார்.







இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.